Annual Subscription Rs. 90/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் – 26 இதழ் – 9 செப்டம்பர் 2013

தனிப்பிரதி
ரூ.9/–



அந்தப்படியே நாம் இருதிறத்தாரும் ஒரே ஆவியினாலே
பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப்
பெற்றிருக்கிறோம் (எபேசியர் : 2 : 18)

# 16th Annual Bible Lectureship
## ஆம் வேதாகம கருத்தரங்கம்

## கருப்பொருள் : “ பாக்கியவான்கள் ”

## 2013, அக்டோபர் 14, 15 (திங்கள், செவ்வாய்)

இடம்:

**கிறிஸ்துவின் சபை வளாகம்**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638701.

- வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு உணவும்,தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும்,பெண்களுக்கும் தனித் தனி இடம் உண்டு.

தொடர்புக்கு : 98427 30382, 99655 30385, 98652 90572

★ ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

★ முகவரி மாற்றத்தை கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.

★ இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு எழுதவும்.

★ அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை/அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தைத் தவிர்க்க இது உதவும்.

— ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| 1. ஆசிரியர் உரை | 1 |
| 2. வேதாகம கருத்தரங்கம் | 9 |
| 3. ஏன் நாங்கள் நரகம்... | 10 |
| 4. பெண்கள் பகுதி | 14 |
| 5. வாலிபர் பகுதி | 18 |
| 6. சிறுவர் பகுதி | 21 |
| 7. நிழலும், நிஜமும் | 23 |
| 8. வசன ரீதியான சபை | 29 |

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 26 SEPTEMBER 2013 Issue - 9


ஆசிரியர் உரை

## " நீ போகலாம் ..... "

" நீ போகலாம் " என்னும் இச்சிறிய சொற்றொடர், நாம் கேள்விப்படாத ஒன்றாக இருக்கப் பெரிதாக வாய்ப்பில்லை. ஏனெனில், இப்பூமிக்குண்டான நம் வாழ்க்கையில், ஒன்றை எதிர்பார்த்து நாம் பிறரிடம் போவதும் அல்லது வேறொன்றை எதிர்பார்த்து பிறர் நம்மிடம் வருவதும் வாடிக்கையான ஒன்றுதான். எல்லோருக்குமே தன்னிறைவு உடையதாக இவ்வாழ்க்கை இருந்து விடுவதில்லை. ஆகவே, சில சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் " நீ போகலாம் " என்னும் இச்சொற் றொடர் பயன்படுத்தப்படும். இதன் பொருள், ஒருவர் நடக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பது கட்டாயம் கைகூடும் என்பதாகவோ அல்லது நீ தலைகீழாக நின்றாலும் நீ நினைப்பது நடப்பதற்கு வாய்ப்பே இல்லை என்பதாகவோ இருக்கும். சரிதானே!.

ஆயினும், இப்படி நமக்குப் பழக்கமும், பரிச்சயமுமான இச்சொற் றொடரை, எதையும், யாரிடத்திலும், எப்பொழுதும் எதிர்பார்க்க வேண்டிய அவசியத் தில் ஒருபோதும் இருந்திராத தேவமைந்தனாகிய இயேசுவானவர் குறுகிய கால இப்பூலோக வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் பயன்படுத்தியுள்ளார். ஆம், இயேசுவால்தான், தன் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அவரைத் தேடி நம்பிக்கையோடு வந்த ஒரு புறவின மனிதனைப் பார்த்து " நீ போகலாம் , உன் குமாரன் பிழைத்திருக்கிறான் " என்றார். (யோவான் 4:50).

இயேசுவின் வாயிலிருந்து பிறந்த இவ்வார்த்தைகளைத் தொட்டு, இம்மாதம் நமக்குக் கிடைக்கும் பாடங்கள் என்னவென்று தெரிந்து கொள்வதற்கு முன், இச்சம்பவம் பற்றியும், இதன் பின்னணி பற்றியும் நமது வழக்கத்தின்படி அறிந்து கொள்ள முயற்சிப்போம்.

நன்மை செய்கிறவராய் பெலஸ்தீனா தேசம் எங்கும் சுற்றி வந்த இயேசுவானவர் ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததோடு, அநேக

அற்புதங்களையும் நடப்பித்தார் என்று வேதாகமம் அறிவிக்கிறது (யோவான் 20:30-31). ஒரு முப்பத்தேழு அற்புத சம்பவங்கள் நற்செய்தி நூல்களில் இடம் பிடித்துள்ளன. அவைகளில் ஒன்றுதான், யோவான் 4:46-54 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கும், " ராஜாவின் மனிதர்கள் ஒருவனுடைய மகன் சுகமாக்கப்படுதல் ". இது யோவான் நற்செய்தியானால் வெளிப்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டாம் அற்புதம்.

" *பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்கின கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு மறுபடியும் வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனுஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்*" என்று நாம் வாசிக்கிறோம் (யோவான் 4:46). இந்தக் கானா ஊரில் தான் இயேசு தனது முதலாம் அற்புதத்தை நடத்தியிருந்தார். அதன் மூலம், அங்கு அவருக்கு ஓர் இணக்கமான சூழ்நிலை இருந்திருக்கும். ஆகவே, அவர் யூதேயாவிலிருந்து சமாரியா வழியாக கலிலேயா வந்தபோது, தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தில் கூட நிற்காமல் நேராகக் கானா ஊர் வந்து சேர்ந்தார். இயேசு இங்கு வந்து சேர்வதற்கு முன்பாகவே, இவர் எருசலேமிலும், யூதேயாவிலும் நடப்பித்த அற்புத சம்பவங்களின் கீர்த்தி வந்து சேர்ந்து விட்டதாகத் தெரிகிறது. குறிப்பாக, வியாயதியஸ்தர்கள் மீது அவர் கொண்டிருந்த பரிவும், வியாதிகள் மீது அவருக்கிருந்த அதிகாரமும் வந்து சேர்ந்து விட்டது.

இச்சமயத்தில் தான், " ராஜாவின் மனிதர்களில் ஒருவனுடைய மகன் மரண அவஸ்தையில் இருந்துள்ளான் " (வச. 47). அவன் ராஜாவின் மனிதனாக, அதாவது, அவருக்கு நெருக்கமான அதிகாரிகளில் ஒருவனாக இருந்துள்ளபடியால், நாட்டுநடப்பு பற்றிய அவனுக்கு அறிவு இருந்திருக்கும். அதன் மூலம், இயேசுவின் வல்லமை பற்றிய செய்தியும் காதுக்கு வந்து சேர்ந்திருக்கும். இவன் ராஜாவின் மனிதர்களில் ஒருவனாக இருந்து செல்வமும், செல்வாக்கும் பெற்றவனாக இருந்தபடியால், தன் மகனுடைய வியாதியைக் குணமாக்க சகல பிரயாசைகளையும் எடுத்திருப்பான். சிகிச்சைக்காகப் போகாத ஊர்களும் இருந்திருக்காது, மற்றும் பார்க்காத வைத்தியர்களும் இருந்திருக்க மாட்டார்கள். எதுவும் பலனளித்ததாகத் தெரியவில்லை. மகனோ நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறான். மனைவியோ ஓயாமல் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறாள். பெற்ற மகனை குணப்படுத்தவும் முடியவில்லை. கட்டிய மனைவியின் கண்ணீருக்குக் காவல் வைக்கவும் முடியவில்லை. எதுவும் செய்ய முடியாமல் கையைப் பிசைந்து நிற்கும் நிலை .

அப்பொழுதுதான், இவன் செவி வழியாகத் தெரிந்து வைத்திருந்த, வல்லமை நிறைந்த இயேசுவானவர், கலிலேயாவிலுள்ள கானா ஊருக்கு வந்திருக்கிறார் என்று கேள்விப்படுகிறான். இவன் வாழ்ந்தது கலிலேயாக் கடற்கரை ஓரப் பட்டணங்களில் ஒன்றான கப்பர்நகூம். கானாவூரிலிருந்து சுமார் 25 மைல் தொலைவு. வைத்தியர்களால் கைவிடப்பட்ட தன் மகனைக் காப்பாற்ற அங்கே ஓர் அற்புதம் தேவை, என்பதை உணர்ந்தான். அது இயேசுவால் தான் முடியும் என்று முடிவு செய்தான். ஆனால், நூற்றுக்கதிபதி போல தூதுவர்களை அனுப்ப (லூக்கா 7:3) வாய்ப்பிருந்தும் அப்படிச் செய்யாமல், மரணம் எப்பொழுது வேண்டுமானாலும் சம்பவிக்கலாம் என்ற நிலையிலிருந்த தன் மகனோடு இறுதி

நேரத்தில் இருக்கலாம் என்றும் எண்ணாமல், தானாகவே கடந்து இயேசுவிடம் வந்தான். இயேசுவின் குணமாக்கும் வல்லமையில் இவனுக்கிருந்த நம்பிக்கையையே இது காட்டுகிறது. அங்கே, இயேசு தன்னோடு கூட வரவேண்டுமென்று மன்றாடுகிறான். பாவம், இயேசுவானவர் இருக்கின்ற இடத்திலிருந்தே எல்லாவற்றையும் நடப்பிக்க முடியும் என்னும் உண்மை அப்பொழுது இவனுக்கு விளங்காமலிருந்திருக்கிறது.

இந்த ராஜாவின் மனிதன் இயேசுவிடம் மிகுந்த நம்பிக்கையோடு வந்தான். ஆனால், இயேசுவோ இவன் நம்பிக்கைக்கு ஏற்றாற்போல் செயல் பட்டது மாதிரி தெரியவில்லை. தன்னைத் தேடி வந்த இம்மனிதனின் ஆத்தும வியாகுலமும், மகனின் மரண அவஸ்தையும், மனைவியின் கண்ணீரும் இயேசுவுக்குத் தெரியாமலா இருந்திருக்கும்? நிச்சயமாகத் தெரிந்திருக்கும். இயேசு மனுஷர் உள்ளத்தில் இருப்பதை அறியும் வல்லமையுடையவர் (யோவான் 2:25). ஆயினும், அவன் எதிர்பார்த்த பதிலை இயேசு தராமல் காரியத்தை அப்படியே திருப்புகிறார். "*அப்பொழுது அவனை நோக்கி; நீங்கள் அடையாளங்களையும், அற்புதங் களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்*" என்றார் (வச. 48). இதுவா அவன் இயேசுவிடம் எதிர்பார்த்தது? இதைக் கேட்கவா அவன் கப்பர்நகூமிலிருந்து கானா ஊருக்கு ஓடி வந்தான்? இல்லவே இல்லை. அப்படியானால், ஏன் இயேசு இப்படிச் சொன்னார்? இன்னும், அவனுக்காக மாத்திரம் இப்படிச் சொன்னாரா? அதற்கும் வாய்ப்பு குறைவாகவே உள்ளது. ஏனெனில், இவனுக்காக மாத்திரம் இவ்வார்த்தைகளை இயேசு பேசியிருந்தால், "நீ" என்று தானே சொல்லியிருக்க வேண்டும். மாறாக, நீங்கள் என்றும், "விசுவாசிக்கமாட்டீர்கள்" என்றெல்லாம் பன்மையில் பேசியுள்ளதைப் பார்த்தால், அவனைத் தாண்டி அங்குள்ளவர் களுக்கும், எதிர்காலத்தில் நம்மைப் போன்றவர்களுக்கும் சேர்ந்தே இப்படிச் சொல்லியுள்ளார் என்று தெரிகிறது. அப்படித்தானே!

இதன் மூலம் இயேசு தான் யார் என்பதை ஒருவன் விசுவாசிப்பதற்கு அற்புதங்களும், அடையாளங்களும் ஒரு காரணியாக ஒருபோதும் அமைந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார். தான் யார் என்று ஜனங்கள் விசுவாசிப் பதற்குத் தன்னைப் பற்றிய ஏராளமான, துல்லியமான தீர்க்கதரிசனங் களும், அவருடைய கிரியைகளின் உண்மையும், போதனைகளின் சாட்சியங்களும் போதுமானவைகளாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார். அற்புத அடையாளங்கள் ஒரு நோக்கத்தோடு அனுமதிக்கப்பட்டு, நடைமுறையில் இருந்த அந்த நாட்களிலேயே, விசுவாசத்திற்கு அவைகள் காரணிகளாக இருக்கக் கூடாதென்று இயேசு எடுத்துரைப்பதை நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது. யதார்த்த நிலை இப்படியிருக்கும் போது, ஏன் இன்றைய கிறிஸ்தவம் அற்புதங்களையும், அடையாளங்களையும் தேடித் திக்கெட்டிலும் அலைந்து கொண்டிருக்கிறக்கிறதென்று புரியவில்லை.

சரி, ராஜாவின் மனிதனுடைய மன்றாட்டுக்கான இயேசுவின் பதில் அவனுக்கு எவ்விதத்திலும் உறைத்ததாகத் தெரியவில்லை. எப்படியெனில், அது சம்பந்தமாக அவன் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அங்கே அவன் சூழ்நிலை மிகவும் மோசமாக இருந்தபடியால், இயேசுவோடு எந்தவித வாதத்திற்கும் தயாராக இல்லை. அவனுடைய ஐம்புலன்களும் படுக்கையிலே கிடந்து, மரணத்தோடு

போராடிக் கொண்டிருந்த மகனையே மையம் கொண்டிருந்தது. ஆகவே, விசுவாசம் பற்றி இயேசு சொன்னதற்கு எந்த பதிலும் கொடுக்காமல், இருள் நிறைந்த என் இருதயத்தின் வேண்டுகோளுக்குச் செவிகொடும் என்று மீண்டும் மன்றாடினுன். " அதற்கு ராஜாவின் மனுஷன், ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு முன்னே வர வேண்டும் என்றான்" (வச. 49).

இங்கே தான், " *இயேசு அவனை நோக்கி ; நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார்* " (வச. 50). அந்த மனிதன் இயேசு சொன்ன வார்த்தையை நம்பிப் போனான். இயேசுவின் வார்த்தையில் இருந்த கனிவும், அக்கறையும், அதிகாரமும் இயேசு தன்னோடு வராமலே அற்புத சுகத்தைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையை அவனுக்கு ஏற்படுத்தியது. ஆகவே தான், இயேசு தன்னோடு வர வேண்டுமென்று மன்றாடியவன், இயேசுவின் வார்த்தையை நம்பிப் புறப்பட்டான். இத்தனைக்கும் பூரணமான (யாக். 1:25), நிறைவான (1 கொரி. 13:10), எல்லாவற்றிற்கும் போதுமான (2 தீமோத். 3:16,17) இயேசுவின் உபதேச வார்த்தைகளைத் தாங்கின தேவ வெளிப்பாடாகிய புதிய ஏற்பாடு (யோவான் 14:26; 16:13) நமக்கெல்லாம் இன்றைக்கு இருப்பது போல் அந்த மனிதனுக்கு இருக்கவில்லை. ஆனாலும், அவன் இயேசுவின் வார்த்தைகளை நம்பிச் செயல்பட்டான். ஆனால், நம்முடைய நாட்களிலோ நிலைமை தலைகீழாக உள்ளது. இயேசுவின் வார்த்தைகள் அடங்கிய புதிய ஏற்பாடு புறந்தள்ளப்பட்டு அற்புத, அடையாளங்கள் முன்னிறுத்தப்படுகிறது. இன்றைய கிறிஸ்தவ சமுதாயம் காதால் கேட்பதில் திருப்திபடாமல், கண்ணால் பார்ப்பதில் பிரியப்படுகிறது. அற்புத அடையாளங்கள் என்று விளம்பரப் படுத்தினால் கூட்டம் அலைமோதுகிறது. இதினிமித்தம் மக்களின் இந்த உணர்வுகளுக்குத் தீனி போடும் அற்புத வியாபாரிகள் நாளும் அதிகரித்து வருகிறார்கள். எங்கே போய் முடியுமென்றே தெரியவில்லை?!

ராஜாவின் மனிதன் அப்படித் திரும்பிப் போகையில், அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான் என்று அறிவித்தார்கள் (வச. 51). அப்பொழுது, எந்த மணி நேரத்தில் அவனுக்குக் குணமுண்டாயிற்று என்று விசாரித்து, இயேசு தன்னுடனே பேசின நேரம் அது தான் என்று உறுதி செய்து கொண்டான். இந்த அற்புத சுகம் அவனுக்கும் அவன் வீட்டாரனைவருக்கும் விசுவாசத்தைக் கொண்டு வந்தது (வச. 52,53).

இப்பொழுது, இயேசு ஆண்டவரால் நடப்பிக்கப்பட்ட இந்த அற்புத சம்பவம், என்னென்ன பாடங்களை நம்மெல்லாருக்கும் கற்றுத்தருகிறது என்று கவனிப்போம்.

## I. இயேசு ஆத்தும சுகத்தில் அதிக அக்கறை காட்டுகிறார்

ராஜாவின் மனிதன் சுகமாக்கப்பட்ட அற்புத சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், சரீர சுகத்தைக் காட்டிலும் ஆத்தும நலனில் இயேசு அதிக அக்கறை காட்டுகிறார் என்பது.

அந்த ராஜாவின் மனிதன் கப்பர்நகூமிலிருந்து மிகுந்த மனபாரத்தோடும், தாங்க முடியாத துயரத்தோடும் இயேசு தங்கியிருந்த கானா ஊருக்கு வந்து, "*தன் மகன் மரண அவஸ்தையாயிருக்கிறபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு*

*வரவேண்டுமென்று அவரை வேண்டிக் கொண்டான்*" (வசனம் 47). ஆனால், இயேசுவோ அவனுடைய குடும்பச் சூழல் பற்றியோ, கடுமையான வியாதியால் படுக்கையில் வீழ்ந்து கிடக்கும் மகனின் நிலை பற்றியோ ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. வியாதியுள்ளவர்களிடம் பரிவு பாராட்டி, மனமிரங்கி, மனதுருகி சுகம் கொடுத்த இயேசு இவன் காரியத்தில் தன் இளகிய இருதயத்தை ஏனோ இறுக்கமாக்கிக் கொண்டாரென்று எண்ணுகிறீர்களா? கண்டிப்பாக அப்படியிருக்க வாய்ப்பில்லை. ஏனெனில் , ராஜாவின் மனிதன் என்னத்தை எதிர்பார்த்து இயேசுவிடம் வந்தானோ அது நடந்தது தானே ! பிறகென்ன?

அப்படியானால், இயேசு அங்கே எதைச் சொல்லாமல் சொல்லியுள்ளார்? சரீர சுகத்தைக் காட்டிலும் ஆத்தும சுகம் தான் முக்கியமானது என்பதை அவனோடு பேசின வார்த்தைகள் மூலம் வலியுறுத்தியிருக்கிறார். சரீரசுகம் பற்றிப் பேசிய ராஜாவின் மனிதனைப் பார்த்து, "*நீங்கள் அடையாளங்களையும், அற்புதங் களையும் காணாவிட்டால் விசுவாசிக்க மாட்டீர்கள்*" என்று கூறுகிறார். இங்க மாத்திரமல்ல, எப்பொழுதுமே இயேசு ஆத்தும காரியங்களுக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்துப் பேசி வந்துள்ளார். "ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்" என்று (மத் 10:28). அவ்வளவு ஏன்? இயேசு பரலோக வாழ்வை நம்மெல்லாருக்காகவும் தியாகம் செய்து இப்பூமிக்கு வந்த நோக்கம் பற்றிப்பேசும் பொழுதும் இதே கருத்தைத் தானே வெளிப்படுத்தியுள்ளார். "*இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனித குமாரன் வந்திருக்கிறார்*" என்று (லூக் 15:10).

இயேசு ஆண்டவர் பூமிக்கு வந்த நோக்கமும், அவன் பூமியிலே வெளிப்படுத்தின பேச்சுக்களும் இப்படியாக இருக்கும் போது, இந்த இயேசுவானவர் நம்முடைய நாட்களில் எப்படியாகச் சித்தரிக்கப்படுகிறார்? சொல்லுங்கள். ஏதோ அவர் மனிதர்களைச் சரீரப்பாடுகளிலிருந்தும், பொருளா தாரச் சிக்கல்களிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் விடுவிக்கும்படி அவதா ரம் எடுத்து வந்த ஒரு மகானாத்தானே எடுத்துக் காட்டப்படுகிறார். இதன் விளைவாக, உலகம் இயேசுவை ஒரு மகானாகத்தானே பார்க்கிறது! ஆகவே தான், அவரை காந்தியோடும், புத்தரோடும் ஒப்பிட்டுக் கருத்தைச் சொல்லி, பாட்டும் பாடுகிறார்கள். உலகத்தைப் பாவத்தின் பிடியிலிருந்து மீட்க வந்த இயேசுவை இப்படியாகப் படிக்கும் போதும், கேட்கும் போதும் வேதனையாக இல்லையா? சரி, உலகம் அவரைப் பார்க்கிற பார்வை ஒரு புறம் இருக்கட்டும். நாம் ஒவ்வொருவரும் எப்படிப் பார்த்துக் கொண்டு உள்ளோம்? "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று பேதுரு ஆணித்தரமாக அடித்துச் சொன்னது போல் சொல்ல நாம் ஆயத்தமாயுள்ளோமா? அந்தத் தேவக் குமாரனின் திருச்சித்தத்திற்கு நம்மை அடிமைப்படுத்த நாம் தயாராக உள்ளோமா?

திருமறை ஆசான் வாசகர்களாகிய நாம் இயேசுவுக்காக நம்மை ஒப்புக் கொடுப்போமானால், அழிந்து போகிற சரீர காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதிலிருந்து நாம் நம்மை விலக்கிக் காத்துக் கொள்ள முடியும். தேவ மனிதர்களுக்கு சரீர காரியங்கள் முக்கியமல்ல என்றுதான் எப்பொழுதுமே உணர்த்தி வந்துள்ளார். மாபெரும் தேவதாசனாகிய அப்போஸ்தலன் பவுலடியார் தன் சரீர பெலவீனத்திற்காகக் கர்த்தரிடத்தில் மூன்று முறை ஜெபித்த போது, "*என்*

*கிருபை உனக்குப் போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்''* [IIகொரி 8:9] இதைவிடக் கர்த்தர் வேறு எப்படிச் சொல்ல வேண்டும். சரீர நிலை மட்டுமல்ல, அழிந்து போகும் எதுவும் தனக்கு முக்கியமில்லை என்று தன் உபதேசங்களில் தெளிவாக்கியுள்ளார். ''*மனிதன் உலகம் முழுவதையும் ஆதாயப் படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனிதன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான் என்று''* [மத். 16:26].

ஆகையால், அருமையானவர்களே ! இனியாகிலும் நாம் சரீரக் காரியங்களுக்கு மாத்திரம் இயேசுவைத் தேடி அலைகிறவர்களாக இல்லாமல் அல்லது அவைகளுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாயிராமல், இரட்சிப்பை அருளும் ஆத்தும காரியங்களுக்கும், பரலோகத்தை உறுதி செய்யும் பக்தி வாழ்விற்கும் முன்னுரிமை கொடுப்போமாக!

## II. இயேசு பாரபட்சம் இல்லாதவராயிருக்கிறார்

ராஜாவின் மனிதன் சுகமாக்கப்பட்ட அற்புத சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்தபாடம், பாரபட்சம் காட்டாமல் இயேசு எல்லோரையும் சமமாக நடத்துகிறார் என்பது.

பாரபட்சம் என்பது ஒருவரை ஒருவிதமாகவும், மற்றவரை வேறுவிதமாகவும் நடத்துவது. சரிசமமான பார்வைக்கோ அல்லது அணுகு முறைக்கோ துளியும் இடமில்லாத ஓர் நிலை. ஆம், இது ஆதிகாலந்தொட்டே மானிடத்தைப் பீடித்திருக்கும் ஒரு பிணி. முற்பிதாக்களில் முதலாமவரான ஆபிரகாமாலே சத்திய பிரமாணம் கொடுக்கப்பட்டு, அவனுடைய தெய்வ பயம் மிகுந்த வேலைக்காரன் எலியேசராலே *தேடிப்பிடித்து அழைத்து வரப்பட்ட மருமகளாகிய ரெபெக்காளும்*, பலதார மணம் தேவனால் சகிக்கப்பட்ட அந்த நாட்களில் *ஏகபத்தினி விரதனாயிருந்த ஈசாக்கும்* பட்சமும், பாரபட்சமும் உடையவர்களாகவே இருந்துள்ளார்கள். ''*ஏசா வேட்டையாடிக் கொண்டு வருகிறது ஈசாக்கினுடைய வாய்க்கு ருசிகரமா யிருந்ததினாலே ஏசாவின் மேல் பட்சமாயிருந்தான்''; ரெபெக்காளோ யாக்கோபின் மேல் பட்சமாயிருந்தாள்''* [ஆதி 25:28] ஈசாக்கின் செயலுக்காகிலும் அங்கே ஒரு காரணம் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ரொபக்காளின் பாரபட்ச செயலுக்குக் காரணம் கூட இல்லை.

ஆனால், பரலோகத்தின் தேவனும், அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவும் பட்சபாதமுடையவர்களல்ல. எப்படியெனில், புதிய ஏற்பாட்டில் முதல் புறவினக் கிறிஸ்தவனான கொர்நெலியுவின் வீட்டுக்கு தேவ வழிநடத்துதலின்படி சென்று, அவன் வீட்டில் கூடியிருந்தவர்களுக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்த பொழுதே, ''*தேவன் பட்சபாதமுள்ளவரல்ல என்றும், எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக் கிறேன்''* என்றார் [அப் 10:34,35]. ஆக, ராஜாவின் மனிதன் புறவினத்தானாக இருந்ததோ அல்லது அவன் ராஜாவின் மனுஷனாக இருந்ததோ இயேசுவுக்கு ஒரு பொருட்டாக இல்லை. தேவ மனிதனாகிய எலிசாவிற்கே உலக அந்தஸ்து ஒரு பொருட்டாக இல்லாதபோது, தேவ மைந்தனாகிய இயேசுவுக்கு இருக்குமா? தன்னிடத்தில் வந்த சீரியா

ராஜாவின் படைத்தவனாகிய நாகமானைப் பார்க்க வீட்டை விட்டு வெளியில் கூட வராமல், "*நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு*" என்று சொல்லி அனுப்பியிருக்கும் போது, [II ராஜா 5:10] "*நீ போகலாம், உன் மகன் பிழைத்திருக் கிறான்*" என்று சொல்வது கூடாத காரியமா என்ன? நிச்சயமாக இல்லை.

ஆனால், தேவனை நம்புகிறேன் என்றும், இயேசுவைப் பின்பற்றுகிறேன் என்றும் தம்பட்டம் அடித்துக்கொள்ளுகிற நம்மிடம் இந்தப் பாரபட்ச குணம் எந்தளவில் உள்ளது? ஒரு கிறிஸ்தவன் பட்சபாதமுள்ளவனாக இருக்கக் கூடாதென்றும் [யாக் 2:1-9] கிறிஸ்துவுக்குள், "யூதனென்றும், கிரேக்க னென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனன் என்றுமில்லை. ஆணென்றும், பெண்ணென்றும் இல்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" [கலா 3:28] என்றும் ஓங்கிக் கன்னத்தில் பளார் என்று அறைவது போல் சொல்லியிருந்தாலும் இது கிறிஸ்தவர்களின் அன்றுட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தப்படுகிறதா? நெஞ்சிலே கையை வைத்துச் சொல்லுங்கள், பார்க்கலாம்!

பாரபட்ச மனப்பான்மையால் பாழாய் போய்க் கொண்டிருக்கும் கிறிஸ்தவ குடும்பங்கள் எத்தனை என்று தெரியுமா? இதே மனப்பான்மையால் பட்டுப்போய் கொண்டிருக்கும் கிறிஸ்தவ நிறுவனங்களின் எண்ணிக்கையை அறிவீர்களா? அவ்வளவு ஏன்? இக்குணத்தால் பிசாசின் மடியிலே தானாகப்போய் விழுந்து குளிர் காய்ந்து கொண்டிருக்கும் சபைகளின் நிலைமைதான் புரியுமா? ஒருவேளை, வேறு பல காரணங்கள் கூட இச்சீரழிவான நிலைக்கு இருக்கலாம். ஆனாலும், பாரபட்ச மனப்பான்மையும் இச்சூழ்நிலைகளுக்கு ஒரு காரணம் என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இயேசு, ஒரு சராசரி மனிதனை எப்படி நடத்தினாரோ அப்படித்தான் ராஜாவின் மனிதனையும் நடத்தியிருக்கிறார். இயேசு ஒரு யூதனை எப்படி நடத்தினாரோ அப்படித்தான் புறவினத்தானையும் நடத்தியுள்ளார். இயேசு ஒரு ஏழையை எப்படி நடத்தினாரோ அப்படித்தான் ஒரு பணக்காரனையும் நடத்தினார். ஆனால், நாம் எப்படி? அதைக் கேட்டு ஏன் நாற்றத்தைக் கிளப்புகிறீர்கள் என்று கேட்கிறீர்களா? நியாயம் தான். அருமையானவர்களே, இந்த மனப் பான்மைக்கு நாம் ஒவ்வொருவரும் முடிவு கட்டினாலொழிய பரலோக பாக்கியத்தைப் பிரகாசமாக்கிக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து செயல்படுவோமாக!

## III. இயேசு ஆச்சரியப்படும் வல்லமையுடையராயிருக்கிறார்

ராஜாவின் மனிதன் சுகமாக்கப்பட்ட அற்புத சம்பவத்திலிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு பாடம், ஆச்சரியப்படும் அளவு இயேசு வல்லமையும், அதிகாரமுடையவராயிருக்கிறார் என்பது.

தேவனுடைய வல்லமையும், இயேசுவின் வல்லமையும் கேள்விக்கு அப்பாற்பட்டதென்பதை நான் எடுத்துக் கூற வேண்டிய அவசியமில்லை. அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும். கிருபை பெற்றவளாகிய மரியாளுக்கு இயேசுவின் பிறப்பு, அவள் திருமணமாகாதவளாக இருந்த நிலையில் அறிவிக்கப்பட்ட போது, "*இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள்*". அப்பொழுது தேவதூதன் அவளுக்கு என்ன சொன்னார் என்று நினைவிருக் கிறதா? "*தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை*" என்று. [லூக் 1:28-42]

அதே வல்லமை தான் தேவ குமாரானிய இயேசுவினிடத்திலும் உண்டு. ஏனெனில், அவர் தேவ குமாரனாக, தேவத்துவத்துள் ஒருவராக இருக்கிறார். நாம் காணும் அண்டசராசரங்கள் அனைத்தும் வார்த்தையின் வல்லமையினாலேயே படைக்கப்பட்டது. படைப்பிலே இயேசுவின் பங்கும் உண்டு. இது சம்பந்தமாக பவுலடியார் கொலோசெ பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது இவ்விதம் வெளிப்படுத்தியுள்ளார். "*ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிற வைகளும், காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களா னாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களா னாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது*" என்று (கொலோ 1:16).

இப்படி வல்லமையும், அதிகாரமும் நிறைந்த இயேசு ஆண்டவர் தான் ராஜாவின் மகனுக்கு ஆச்சரியப்படும்படியான சுகத்தை இருந்த இடத்திலிருந்தே அளித்தார். ஆம், வியாதியஸ்தன் ஒரு பட்டணத்தில் இருந்தான். இயேசு வேறொரு ஊரில் இருந்தார். இயேசு அவனைப் பார்க்கவில்லை. அவனும் இயேசுவைப் பார்க்கவில்லை. ஆயினும், "நீ போகலாம், உன் மகன் பிழைத்திருக்கிறான்" என்ற வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளிப்பட்டவுடனே அங்கே அவனுக்கு சுகம் கிடைத்து விட்டது. இப்படி வியாதிகள் மட்டுமல்ல, பலத்த சுழல்காற்றும், கொந்தளிக்கும் கடலும் அவருடைய வார்த்தைகளுக்குப் பணிந்திருக்கிறது. "*அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப் பார்த்து, இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய், மிகுந்த அமைதி உண்டாயிற்று*" (மாற் 4:37–39). இயற்கை மாத்திரம் தானா? ஆதிகாலந்தொட்டு மனிதனைப் பயமுறுத்தி வரும் மரணமும் அவர் வார்த்தைகளுக்கு முன் மண்டியிட்டது தெரியும் தானே. "*நாறுமே, நாலு நாளாயிற்றே*" என்று (யோவான் 11:39) சொல்லப்பட்டவனை "*லாசருவே, வெளியே வா*" என்று உரத்த சத்தமாய்ச் சொன்ன போது கால்களும், கைகளும் கட்டப்பட்ட நிலையிலேயே கல்லறையை விட்டு வெளியே வந்தானே ! இந்த வார்த்தைகளின் வல்லமையை எப்படித்தான் விவரிப்பதோ தெரியவில்லை.

அருமையானவர்களே, இப்படிப்பட்ட வல்லமை நிறைந்த, ஆச்சரியப் படும்படியான வார்த்தைகளுக்கு சொந்தக்காரராகிய இயேசுவிடமிருந்து தான் புதிய ஏற்பாட்டு வசனங்கள் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. (யோவான் 14:26; II யோவான் 9). அப்படியானால் இங்கே ஒரு மிகப்பெரிய கேள்வி நமக்கு முன்பாக இருக்கிறது. ஆம் வியாதிகளும், இயற்கையும், மரணமும் இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்பட்டிருக்கும் போது, மனிதர்களாகிய நாம் அவருடைய புதிய ஏற்பாட்டு உபதேச வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் வாழ்ந்து கொண்டுள்ளோமா? சிந்திப்போம். அவருடைய வார்த்தைகள் தான் நம்மை இறுதி நாளில் நியாயந்தீர்க்கப் போகிறது என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்று இருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்" (யோவான் 12:48) என்றார்.

ஆகவே, ராஜாவின் மனிதனுடைய மகன் இயேசுவால் சுகமாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து கிடைத்த பாடங்களை மனதிலே ஏற்று, கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு வார்த்தைகளுக்கு நம்மைச் சீமூலமாக ஒப்புக்கொடுத்து நம்முடைய பக்தி வாழ்க்கையைப் பாங்காய் நடத்துவோமாக! ஆமென்!! ✻

ஜெபியுங்கள் ! திட்டமிடுங்கள்!! பங்கு பெறுங்கள் !!!

**காங்கயம் கிறிஸ்துவின் சபையாரும்,**
**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டமும்**
**இணைந்து நடத்தும்**

# பதினறாம் வேதாகம கருத்தரங்கம்

## SIXTEENTH ANNUAL BIBLE LECTURESHIP

**நாள்**

**அக்டோபர் 14,15 - 2013 (திங்கள், செவ்வாய்)**
**(அரசு விடுமுறை நாட்கள்)**

**கருப்பொருள் -THEME**

**" பாக்கியவான்கள்..." (மத்தேயு 5ம் அதி.)**
**" The Blessed ...." (Matt 5th Chapter)**

திங்கள் : காலை 8:45 மணி - மாலை 4.45 மணி வரை
செவ்வாய் : காலை 8.45 மணி - மதியம் 1.00 மணி வரை


**இடம்**

**கிறிஸ்துவின் சபை வளாகம்**
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

- வெளியூர்களிலிருந்து வருபவர்களுக்கு உணவும், தங்குமிடமும் இலவசம்.
- தங்குவதற்கு ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித் தனி இடவசதி உண்டு.

**தொடர்பு முகவரி**

*கிறிஸ்துவின் சபை*
288, தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385, 98652 - 90572



# ஏன் நாங்கள் நரகம் இருக்கிறதாக நம்புகிறோம்?

**Bro. J.C. சோட்**

நரகம் இருப்பதை நாம் விசுவாசிப்பதால், சில வேளைகளில், நரக அக்கினி மற்றும் கந்தகம் பற்றி நாம் பிரசங்கிப்பதாக குற்றம் சாட்டப்படுகிறோம். ஜனங்கள் அவர்கள் பாவங்களுக்கான தண்டனையாக அக்கினிக் கடலிலே தூக்கி எறியப்பட போகிறார்கள் என்பதை நாம் மகிழ்ச்சியோடு சொல்லுகிறோம் என்ற ஒரு தவறான கருத்து பலருக்கு இருக்கிறது. வேதாகமம் பேசுகின்ற நரகத்தை நாம் விசுவாசிப்பதும், துன்மார்க்கர் ஒரு நாளில் அங்கே அனுப்பப்படுவார்கள் என்பதும் உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு யாரும் செல்வதை நாங்கள் விரும்புவதில்லை. தேவனுக்கு விரோதமான தங்கள் வழியில் இருந்து நாங்கள் திரும்ப மாட்டோம் என்று முரண்டு பிடித்து, நிச்சயமான ஆக்கினை தரும் அந்த இடத்திற்கு ஜனங்கள் செல்வதில் உண்மையாகவே எங்களுக்கு எவ்வித மகிழ்ச்சியும் இல்லை.

பொதுவாக நரகம் என்பது, துன்மார்க்கர் என்றென்றும் வாழ்கின்ற வேதனை நிறைந்த, அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலாக, நித்திய தண்டனைக்கான இடமாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அது நித்திய ஜீவனை இழந்து போன ஆத்துமாக்களின் நிரந்தர குடியிருப்பாக இருக்கும். ஆனால், ஒருவர் இப்படிப்பட்ட பயங்கரமான இடத்திற்கு ஏன் போக வேண்டும்? அல்லது அன்புள்ள தேவன், ஏன் ஒருவரை இந்த நரகத்திற்கு அனுப்ப வேண்டும்? இப்படிப்பட்ட கேள்விகள் நரகம் என்றால் என்ன? என்பது பற்றி நாம் மேலும் விளக்க வேண்டும் என்கிற அவசியத்தை ஏற்படுத்துகிறது. நரகமானது ஆரம்பத்தில் பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் தான் ஆயத்தமாக்கப்பட்டது. துன்மார்க்கர் பற்றி பேசும்போது, கிறிஸ்து, நியாயத்தீர்ப்பு நாளிலே, அவர்களைப் பார்த்து, "*சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்*" என்று சொல்கிறார் [மத்தேயு 25:41]. பிசாசானவன் பாவம், தேவபக்தியின்மை, துன்மார்க்கம் போன்றவைகளுக்கு அடையாளமாக இருக்கிறான். எது நன்மையானதோ, எது சரியானதோ அதற்கு நேர் எதிரானவன் பிசாசு. அவன் தேவனுக்கு விரோதியாக இருக்கிறான். அவன் பக்கத்தில் நிற்க தூதர்களும் அவனுக்கு உண்டு. ஆகையால், நரகம் அவர்களுக்காக ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது. அதே வேளையில், மனித இனத்தின் ஆத்துமாக்களுக்காக நரகம் ஆயத்தமாக்கப் படவில்லை என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். மனிதன் ஒரு பாவியாக இருந்தாலும் கூட, நரகத்திற்கு தப்பித்துக் கொள்ள தேவன் அவனுக்கு ஒரு வழியைத்

தந்திருக்கிறார். மனிதன் தேவனையும், அவர் தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்து மூலமாக தருகிற இரட்சிப்பையும் நிராகரிக்கும் போது, அவன் ஆத்துமாவில் இழந்து போய் நரக தண்டனையை அடைகிறான். ஆனால், அப்போது கூட தேவன் மனிதனை அங்கே அனுப்புவது இல்லை. மனிதன் தன்னைத் தானே அங்கே அனுப்பிக் கொள்கிறான். ஆகையால், மனிதன் நரகம் போவதற்கு தன்னைத் தானே குற்றம் சாட்டிக் கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களையல்ல.

நரகம் எப்போதும் கீழே இருக்கும் ஓர் இடமாகவும், பரலோகம் மேலே இருக்கும் இடமாகவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. வேதாகமம் இரண்டு இடங்களுமே உண்மையாகவே எங்கே இருக்கிறதென்று வெளிப்படுத்த வில்லை. ஆனால், இரண்டு இடங்களுமே அங்கே செல்லும்படி யாரெல்லாம் நியாயந்தீர்க்கப்படுகிறார்களோ அவர்களுக்காக ஆயத்த மாக்கப்பட்டவைகள்.

ஏற்கனவே, நாம் குறிப்பிட்டிருக்கிறபடி, நரகம் என்பது தண்டனைக்கான ஓர் இடமாகும். " *தன் சகோதரனை வீணனென்று சொல்கிறவன் எரி நரகத்திற்கு ஏதுவாக இருப்பான்* " என்று கிறிஸ்து எச்சரித்தார் (மத்தேயு 5:22). ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும், அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்க்கும்படியாக கிறிஸ்து தம்முடைய தூதர்களை அனுப்புவது சம்மந்தமாகப் பேசும் போது, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள், அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் (மத்தேயு 13:42) என்றார். யோவான் இவ்விதமாக எழுதினார். "*அப்பொழுது மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்* " (வெளி. 20:14,15). மேலும் யோவான், " *பயப்படுகிற வர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும், கந்தகமும், எரிகிற கடலிலே பங்கடைவார்கள்* " என்றார் (வெளி. 21:8). சரீர மரணம் என்று ஒன்று இருக்கிறது. முன்பு நாம் வாசித்த வசனத்தில் பேசப்பட்டிருக்கும் இரண்டாம் மரணம் என்பது தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதைக் குறிக்கிறது. நித்திய தண்டனைக்கான இடமாகிய நரகத்தில் தள்ளப்படுதல் என்பது, ஒருவர் தேவனிடத்திலிருந்து துண்டிக்கப்படுதலாகும்`அப்படிப்பட்ட வருக்கு நம்பிக்கையே இல்லை.

கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரின் ஊழியம் பற்றி யோவான் ஸ்நானகன் விவரித்த போது, " *மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; எனக்குப் பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார், தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார்* " என்றான் (மத்தேயு 3:11,15). இங்கே கிறிஸ்து, பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்

நானம் கொடுக்கத்தக்கதான அளவு வல்லமையைப் பெற்றிருப்பார். நிச்சயமாகவே, இது அப்போஸ்தலர்களுக்கு கிறிஸ்து செய்த வாக்குதத்தத்தைக் குறிக்கிறது. அவர், பரிசுத்த ஆவியானவர் அல்லது தேற்றரவாளனை அனுப்புவார். அதன் பின்பு, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றதை நாம் வாசிக்கிறோம் (யோவான் 16:13; அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரம்). ஆனால், கிறிஸ்து அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுக்கும் வல்லமை பெற்றிருப்பார். இது, துன்மார்க்கர் அக்கினிக்கடலில் தூக்கி எறியப்படுவார்கள் என்பதைக் குறிக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமை அல்லது நீதிமான்களை களஞ்சியத்தில் சேர்ப்பார் என்றும் பதர் அல்லது துன்மார்க்கரை அவியாத அக்கினியால் சுட்டெரிப்பார் என்றும் ஓர் உதாரணத்தின் மூலமாக விளக்குகிறார்.

துன்மார்க்கர் பற்றிப் பேசும் போது, "*அவன் தேவனுடைய கோபாக்கினை யாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும், கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும், பகலும் இளைப்பாறுதலிராது*" என்று வாசிக்கிறோம் (வெளி. 14:10,11).

இயேசு இப்படிச் சொன்னார், "*ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களா யிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்*" என்று. (மத்தேயு 10:28). மறுபடியும் இயேசு, "*சர்ப்பங்களே, விரியன் பாம்புக் குட்டிகளே! நரகாக்கினைக்கு எப்படித் தப்பித்துக் கொள்வீர்கள்?*" என்றார். (மத்தேயு 23:33). இங்கே இயேசு தம்முடைய நாட்களில் வாழ்ந்த பக்தியுள்ள பாவிகளாகிய பரிசேயர்களையும், மாயக்காரரையும் குறித்து இப்படிச் சொன்னார்.

எபிரெய எழுத்தாளர், "*மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரக்கத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்கு பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்*" (எபிரெயர் 10:28,29) என்று சொல்லியுள்ளார். பவுல், "*தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும் போது அப்படியாகும்*" என்றார் (II தெச. 1:7,8). துன்மார்க்கரைப் பற்றியும், நீதிமான்களைப் ப்ற்றியும் பேசும் போது இயேசு, "*அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும்*

*போவார்கள்* '' என்றார் (மத்தேயு 25:46). மறுபடியும் இயேசு, ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பபும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் (மத்தேயு 8:15). பவுலடியார், '' *பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்* '' என்றார் (ரோமர் 6:23). அதன் பின்பு யோவான், '' *மேலும் அவர்களை மோசம் போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத் தீர்க்கத்தரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும், பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப் படுவார்கள்* '' என்றார் (வெளி. 20:10).

சிலபேர், ஓர் ஆத்துமா நரகத்தில் போடப்படும்போது, அது உடனடியாக அல்லது முற்றிலுமாக அழிந்து போய் விடுகிறது, அதோடு அவர்களின் கதை முடிந்து போய் விடுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆயினும், நாம் பார்த்திருக் கிறபடி, ஒருவர் நரகத்திற்குப் போய்விட்டால், சதாகாலமும் தண்டிக்கப்பட்டு, என்றென்றும் வேதனைப்படுவார். வேறுவிதமாகச் சொன்னால், பரலோகம் எதுவரை நிலைத்திருக்குமோ அது வரைக்கும் நரகமும் நிலைத்திருக்கும். ஆம், இரண்டுமே நித்தியமானது.

என் நண்பர்களே, கிறிஸ்து அளிக்கும் இரட்சிப்பு குறித்தும், நாம் நரகம் போய்விடாதபடி எடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு முயற்சி குறித்தும், எச்சரிக்கப்பட்டு, நாம் பரலோகம் போக மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சிகள் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறோம். ஆனால், தேவன் தமக்குக் கீழ்ப்படியும்படி யாவரையும் கட்டாயப்படுத்தமாட்டார். முடிவு உங்களுடையது. கிறிஸ்து கொடுக்க முன்வரும் இரட்சிப்பை நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது எங்கள் ஜெபமாயிருக்கிறது. இதோ, இப்பொழுதே அனுக்கிரக காலம் இப்பொழுதே இரட்சணிய நாள் என்று பவுல் சொல்கிறார் (II கொரி. 6:8). நாம் இளைப்பாறுதலைப் பெற்றுக் கொள்ளும்படியாக அவரிடத்தில் வரும்படி கிறிஸ்து நம்மை அழைக்கிறார் (மத்தேயு 11:28–30). நம்முடைய இரட்சிப்பு குறித்து கவலையற்ற வர்களாக இருக்கக் கூடாது என்று எபிரெய எழுத்தாளர் நமக்கு புத்திமதி சொல்கிறார் (எபிரெயர் 2:4).

நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா? பரலோகம் செல்வதற்கு ஆயத்த மாகிக் கொண்டிருக்கிறீர்களா? உங்கள் பதில், இல்லையென்ப தானால், நீங்கள் ஆத்துமாவை இழந்தவர்களாகிறீர்கள். நரகம் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக் கிறது. என் நண்பரே, இன்னும் காலம் இருக்கும் போதே கர்த்தருக்குச் செவி கொடுங்கள். அவரை விசுவாசித்து, உங்கள் பாவங்களிலிருந்து மனந் திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு, உங்கள் பாவங் கள் கழுவப்பட ஞானஸ்நானம் பெறுங்கள். அப்படி நீங்கள் செய்தால், கிறிஸ்து உங்களை இரட்சித்து தம்முடைய சபையில் உங்களை சேர்த்துக் கொள்வார் (மாற்கு 16:16), (அப். 2:38,47). அதன் பின்பு, நீங்கள் கர்த்தருக்காக வாழ முடியும், அவருக்கு உண்மையாக இருந்தால், ஒரு நாள் பரலோகம் உங்கள் வீடாகும். நீங்கள் என்ன செய்தாலும், தயவு செய்து நரகத்திற்குப் போய்விடாதீர்கள்.

*

பெண்கள் பகுதி

# "செயலால் பிடிபட்டவள்"

Sis. RACHEAL NAYAGAM

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே!

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள். நம் சிருஷ்டி கர்த்தாவாகிய பிதாவாகிய தேவன், பெண்களாகிய நம்மை விசேஷித்த நோக்கத்திற்காக எதிர் பார்க்கிறார். நம்மை அளவுக்கதிகமாய் நேசிக் கும் நம் தேவன் நாம் கெட்டுப் போகாமல் பாவத்திலிருந்து இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள தம் ஒரே பேறான குமாரானை இந்த மண்ணுக்கு அனுப்பி வாழவைத்து, மரிக்க வைத்து உயிர்த்தெழவும் செய்தார். அந்த இயேசு கிறிஸ்து தாம் ஊழியம் செய்த நாட்களில் பெண்களையும் விசேஷமாக கருதி அவர்களோடு நேரத்தை செலவிட்டு தாம் தேவனுடைய குமாரன் என்றும், இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே தாம் வந்ததாகவும், அதை உலகம் அறிந்து கொள்ள வேண்டும் என்றும் உபதேசம் பண்ணினார். அப்பேர்பட்ட சம்பவங்களில் ஒன்றைப் பற்றி (யோவான் 8:3-11) இம்மாதம் கற்றுக் கொள்வோம்.

வேதாகமத்தில் இடம் பெற்றுள்ள சம்பவங்களில் இது ஒரு மிகவும் மென்மையான, படிப்பவர்களை தொடக்கூடிய ஒன்று விபச்சாரத்திலே கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்ட அந்த ஸ்திரீயிடத்தில் நம்மை வைத்து இதை படிப்போமாகில் ஒரு புதுமையான புரிந்து கொள்ளுதல் நமக்கு கிடைக்கும். இயேசுவை குற்றம் சுமத்துவதற்கான காரணம் உண்டாகும் பொருட்டு மீண்டும் ஒரு சோதனையை இயேசுவின் முன் வைக்கிறார்கள் அவருக்கு விரோதிகள். பதில் எப்படியிருந்தாலும் பரவாயில்லை, இம்முறை எப்படியாவது அவரை சிக்கவைக்க வேண்டும் என்று எண்ணினார்கள் இந்த சது சேயரும், பரிசேயரும்.

இயேசு தேவாலயத்தில் உபதேசம் பண்ணிக் கொண்டு இருந்த போது விபசாரத்திலே கண்டுபிடிக்கப் பட்ட ஒரு ஸ்திரீயை அவரிடத்தில் கொண்டு வந்து நடுவே நிறுத்துகிறார்கள். அவளோடே விபசாரம் செய்த மனிதன் என்ன ஆனான் என்று நமக்கு தெரியாது. கையும், மெய்யுமாய் பிடிக்கப்பட்டாள் என்கிற போது கட்டாயம் எந்த ஆண் என்று அவர்களுக்குத் தெரியும். நியாயப் பிரமாணம் சொல்கிறது இருவரும் கல்லெறியப் படவேண்டும் என்று. இருவரும் கல்லெறியப்படுவதை விரும்பாமலோ என்னவோ ஒருத்தியை குனிய வைத்து வேடிக்கை பார்த்தார்கள். இந்த பெண், இரண்டு, மூன்று சாட்சிகளினால் பிடிக்கப் பட்டாள். விபச்சார பாவத்தில் பிடிக்கப் பட்டால் நியாயப் பிரமாணத்தின்படி என்ன தண்டனை என்பது அவளுக்கு

தெரியும். தானும், அந்த மனிதனும் தான் தனியாக இருக்கிறோம் என்று பயமில்லாமல் இருந்திருப்பாள். திடீரென்று ஒரு கூட்டம், அவள் பிடிபட்டாள். அந்த அவலக் காட்சி யிலிருந்து அவளை பிடித்து தள்ளிக் கொண்டு வந்தார்கள். அலங்கோல மான உடையுடன் காட்சி தந்திருப்பாள். அநேகர் அங்கே (பெரியோர் முதல் சிறியோர் வரை) இருந்ததினால் தன்னை கட்டாயம் கொல்லப் போகி றார்கள் என்று உறுதி செய்ததினால் அவள் சரியாக நடக்கக்கூட முடியா மல் இருந்திருப்பாள். பிடித்து வந்த இந்த மனிதர்கள் சட்டத்தைப் பின்பற்றுகிற நல்ல மனிதர்கள் என்று நம்பப் படுகிறவர்கள். ஆகவே, இரக்கத்தை அவள் எப்படி எதிர் பார்க்க முடியும்?

அவளை எங்கே கொண்டு போகிறார்கள் என்று பார்க்க கூட்டம் அதிகரிக்கிறது. ஓ, தன்னை தேவால யத்திற்கு கொண்டு போகிறார்கள் என்று கடைசியில் தெரிந்து கொண் டாள். தப்பிக்கவே வழியில்லை. தேவாலயம் நியாயப் பிரமாணத்தின் அடையாளம். சட்டத்தின்படி மரணம் உறுதி. கூட்டத்தின் நடுவே அவளை நிறுத்துகிறார்கள்.

இவள் அவர்களுக்கு புதியவள் அல்ல. இவளுக்கு அவர்களைத் தெரியும். அப்படியே அவர்களுக்கும் தெரியும். அநீதியான மனிதர்களின் கண்களில் நீதிப் பார்வை பார்க்கப் படுகிறது. போதகரே, (முந்தின நாளில் "வஞ்சகன்" என்று அவரை அழைத் தார்கள்) மோச பிரமாணத்தின்படி இவள் கல்லெறியப்பட வேண் டும். நீர் என்ன சொல்லுகிறீர்? என்றார்கள்.

எந்த வகையிலும் சரியாக பதில் சொல்ல முடியாத சூழ்நிலை இயேசுவுக்கு. சரி, கல்லெறியலாம் என்றால் ரோமச் சட்டத்தை மீற வேண்டி யிருக்கும். அதோடு அவளுக்கு இரக் கம் காட்டாமல் போய் விடும். கல்லெறிய வேண்டா மென்றால் மோசேயின் பிரமா ணத்தை மீற வேண்டியதாகிவிடும். நியாயப் பிரமாணத்தை மீறுகிறார் என்று சாட்சியோடு நிரூபிக்கப்பட்டு விடுவதோடு மரணத்துக்கும் பாத்திர ராகவிடுவாள்.

இதற்கு முந்தின அதிகா ரத்தில் பார்க்கும் போதும் இயேசு தன்னை குற்றம் புரியும் ஒருவராக காட்டுவதற்கு இடம் கொடுக்க வில்லை. அவருக்கு தெரியும் எதைச் சொல்லுவது என்று. நடுங்கி கொண்டு நின்ற பெண்ணை இயேசு ஏறெடுத்துக் கூடப் பார்க்க வில்லை. பிறருடைய கண்களே அங்கு போதுமானதாக இருந்தது. *"இயேசு வோ குனிந்து விரலினால் தரையிலே எழுதினார்"*. அவர் என்ன எழுதினார் என்று யாருக்கும் தெரியாது. உடனடி பதிலை அவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்று இயேசு நினைக்க வில்லை. அந்த சூழ்நிலையின் வேகம் குறைய வேண்டும் என்று இயேசு நேரத்தை எடுத்துக் கொண்டார். அவர்களோ ஓயாமல் அவரைக் கேட்டுக் கொண்டே யிருந்தார்கள். சூட்டோடு சூடாக அவளை தீர்த்து விட வேண்டு மென்று நினைத்தார்கள். இந்த ஸ்திரீ அவர்களுக்கு ஒரு முக்கியமான வளாகத் தெரிய வில்லை. அவள் சாவு அவர்களுக்கு லேசாக இருந்தது. ஒரு பொருட்டாகவே தெரியவில்லை.

இயேசு, பயமில்லாமல் நிமிர்ந்து எழுந்து அவர்களைப் பார்க் கிறார். எதை அவர் பார் த்தார்? இருதயத்தில் அநீதியை வைத்துக் கொண்டு பார்ப்பதற்கு நீதிமான்கள் போல் காட்சியளிக்கும் எத்தனை பேர்களை பார்த்து மனம் உடைந்த வராய் இயேசு இருந்தி ருக்கிறார். இயேசு, மனிதர்கள் உள்ளத்தில் இருப்பவைகளை அறிந்தவராக இருக்கிறார்.

என்ன சொல்லுவாரோ என்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். இரண்டு தெரிந்து கொள்ளுதலை அவர்கள் முன் வைக்கிறார். அவள் மீது கல்லெறியுங்கள். அல்லது அவள் மேல் கல்லெறியாதேயுங்கள். ஆனால், உங்களில் பாவமில்லாதவன் இவள் மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று அழுத்தம், திருத்தமாக கூறி விடுகிறார். யார் எதிர்த்து பேசி பேச முடியும்? அங்கே பேச்சில்லை, பயமுறுத்தல் இல்லை. முனுகல் இல்லை. அப்படியே போய் விட்டார்கள். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்து கொள்ளப் பட்டு பெரியோர் முதல் சிறியோர் வரைக்கும் ஒவ்வொருவராய் போய் விட்டனர்.

இத்தோடு இச்சம்பவம் முடிந்து விடவில்லை. அவள் அங்கேயே இன்னமும் நிற்கிறாள். இயேசு மறுபடி யும் குனிந்து தரையிலே எழுதினார். இயேசு எழுதுகிறார். அவள் காத்திருக் கிறாள். ஏன் அவள் ஓடவில்லை? தப்பிப் போவதற்கு சரியான தருணம் அல்லவா இது? எப்படி அவளால் ஓட முடியாமல் இருந்தது?

இயேசு அங்கே மனிதர்களா கிய, நாம் வழக்கமாகச் செயல்படுவது போல் செயல்பட முடியாது. இரட்சகரா கிய இயேசு, அவள் வாழ்க்கையை இரட்சித்தார். பகை வர்கள் சென்று விட்டனர். இயேசு அவளை விடுதலை பண்ணினார்.

இயேசு நிமிர்ந்து இப்போது அவளைப் பார்க்கிறார். எதைப் பார்த் தார்? தேவனுடைய படைப்பாக அவ ளைப் பார்த்தார். கெட்டுப் போனவளாக இருந்தாலும் அவளை கண்ணோக் கினார். சிக்குண்டு, சீரழிந்து, பயந்து, மகிழ்ச்சியே இல்லாமல் இருந்த அவளது வாழ்க்கையைப் பார்த்தார்.

ஸ்திரீயே அவர்களெல்லாம் எங்கே? கற்களை கையிலே வைத்தி ருந்து, நீதிமான்கள் என்று தங்களை நினைத்திருந்தவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினிக் குள்ளாகத் தீர்க்கவில்லையா? என்றார். அதற்கு *"இல்லை, ஆண்டவரே"* என்றாள். இயேசு அவளை நோக்கி நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிற தில்லை. *"நீ போ இனி பாவஞ் செய்யாதே"* என்றார் [7:11]. வாழ்க்கையை நடத்து. ஆனால் பாவமில்லாத வாழ்க்கை. உனக்கு மற்றுமொரு தருணம் கொடுக் கப் பட்டிருக்கிறது. நீ இனி விபசாரி யாய் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அது உன் வாழ்க்கையையே விலை போகச் செய்து கொண்டிருந் தது. இப்பொழுது நீ விடுதலையாக்கப் பட் டிருக்கிறாய். உன் வாழ்க்கையைத் தீர்மானித்துத் தெரிந்து கொள் என்றார்.

அவள் எதை தெரிந்தெடுத்திருப்பாள்? ஒரு வேளை, அவள் இயேசுவுக்கு பின்னால் சென்று கொண்டிருந்த மற்ற அனேக ஸ்திரீகளோடு சேர்ந்திருக் காலம். அவர்களும் அவளை ஏற்றுக் கொண்டிருப்பார்கள். அந்தச் சூழ் நிலையில் அவள் வளர்ந்திருக்கலாம்.

இதை வாசித்த அருமை யானவர்களே! இச்சம்பவத்தில் சம்பந் தப்பட்ட ஒவ்வொருவரிட மிருந்தும் பாடங்களைக் கற்றிருப் போம் என்று நம்புகிறேன். பரிசேயர், சதுசேயர் கூட்டத்தினர்களிடருந்து ஒரு பாடம். இயேசுவிடமிருந்து மகா உன்னதமான பாடம் கற்றிருப் போம். அன்பின் இயேசு, இரக்கத்தின் இயேசு, மன்னிப் பின் இயேசு, பொறுமையின் இயேசு இப்படி சொல்லிக் கொண்டே போக லாம். ஸ்திரீயிடமிருந்து ஒரு பாடம்.

அப்படியானால், இயேசுவின் மரணத்தினால் ஞானஸ்நானத்தின் மூலமாக பாவ மன்னிப்பைப் பெற்ற நாம் எப்படி செயல்படுகிறோம்? சிந்திப்போம். தேவனும், இயேசுவும் நம்மை நேசிக்கிறார்கள். நாமும் பிறரை நேசித்து, மன்னித்து இயேசுவைப் போல் வாழ்வோம். இன்றைக்கு அவருடைய வார்த்தை நமக்கு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டா யிற்று. அதற்குக் கீழ்ப்படிவோம். இயேசு பிதாவின் சித்தத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தது போல் நாமும் அவர்தம் வார்த்தைக்கு நம்மை ஒப்புக் கொடுப்போம். ஆமென்.

*

## சாத்தானின் பார்வையில் பாக்கியவான்கள்

* வாரத்தில் ஒரு முறை ஒரு மணி நேரம் கூட சக கிறிஸ்தவர்களோடு செலவு செய்ய முடியாமல் பரபரப்பாகவும், சோர்வாகவும் இருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் என் நல்ல வேலையாட்கள்.
* தேவனுடைய சித்தத்தை நாடுவதற்கு பதிலாக உலக சிற்றின்பங்களை நாடுகிறவர்கள் பாக்கியவான்கள். கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இருந்து கொண்டு இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் என் ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள்.
* பிரச்சனைகளை உண்டாக்குகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் என்னுடைய புத்திரர் எனப்படுவார்கள்.
* முணுமுணுத்து, புகார் செய்து கொண்டு மகிழ்ச்சி இல்லாமல் இருப்பவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் சோர்வடையச் செய்கிற என் வேலையை சுலபமாக்கு கிறார்கள்.
* மற்றவர்களைப் பற்றி அவதூறுப் பேசுகிறவர்கள் பாக்கியவான்கள். ஏனென்றால், தேவன் வெறுக்கிற, ஆனால் நான் விரும்புகிற பிரிவினையை அவர்கள் உண்டாக்குகிறார்கள்.

வாலிபர் பகுதி

# வசனமே வழி

**Bro. Benny Martin**

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! மாதமொரு முறை மறக்காமல் இம்மாத இதழின் மூலமாக உங்களை சந்திப்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. வாலிப வயது வழி தவறிப் போகிற வயது, விளைவுகளைப் பற்றி விவாதிக்காமல் விரைந்து சென்று செயலாற்றுகிற வயது. இன்று உலகத்தில் நாம் பார்க்கும் போது வன்முறை மற்றும் பெருங்குற்றங்களில் வாலிபர்களின் பங்கு அதிகமாக இருப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வாலிபர்கள் வளர்க்கப்பட்ட விதம், குடும்பப் பின்னனி போன்றவைகள் அவர்கள் குற்றங்களில் ஈடுபடுவதற்கு காரணிகளாக அமைவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால், அது ஓரளவுக்குத் தான் உண்மை. ஏனென்றால், சிறுவயதில் நன்றாக வளர்க்கப் பட்டவர்களும், நல்ல குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர்களும் சில சந்தர்ப்பங்களில் மிக மோசமான காரியங்களில் ஈடுபடுவதை நாம் பார்க்கிறோம். எனவே, வாலிபர்களைப் பாவம் செய்யாத படி முழுமையாகத் தடுப்பது வளர்ப்போ அல்லது குடும்பப் பின்னணியோ அல்ல. தேவனுடைய வார்த்தை மட்டுமே தடுக்கும். தேவனுடைய வார்த்தை மட்டுமே வாலிபர்களைப் பாவ வழியில் விழுந்து போகாதபடிக்குப் பாதுகாக்கிறது. பிரியமானவர்களே! இக்கட்டுரையை வாசித்துக் கொண்டிருக்கும் போது, உங்களில் சிலர் என்னுடைய இந்த மோசமான சூழ்நிலைக்குக் காரணம் என் குடும்பப் பின்னணி மட்டும் தான் என்று நினைத்தால் அந்தத் தவறான எண்ணத்தை உங்கள் மனமெனும் நந்தவனத்திலிருந்து வேரறுத்துப் போடுங்கள். ஏனென்றால், இதுவே உங்கள் வளர்ச்சியை ஓரளவிற்காகிலும் தடுக்கும் ஒரு களையாக முளைத்து விடும். தேவனுடைய வார்த்தை என்னும் விதையானது நம் இருதயமாகிய நிலத்தில் விதைக்கப்பட்டால் அது வளர்ந்து, நம் வளமான வாழ்விற்கு வழி கோலும். சுருக்கமாக சொல்லப்போனால் தேவனுடைய வார்த்தையை நம் இருதயத்தில் வைத்து வைத்தால் நாம் பாவம் செய்யாதபடிக்கு அது நம்மைப் பாதுகாக்கும் (சங். 119:11). இப்போது தேவனுடைய வார்த்தை நம்மை வாழ்க்கையின் எந்தெந்த நிலைகளில் எல்லாம் பலப்படுத்துகிறது என்பதைக் காண்போம்.

## I. எல்லாம் முடிந்து விட்டது என்ற நிலையில் (சங். 119:25)

நம் எல்லோருக்கும் வாழ்க்கையில் எல்லாமே முடிந்து விட்டது. இனி அவ்வளவுதான் என்கிற நிலை ஒரு கட்டத்தில் ஏற்படுகிறது. சங்கீதகாரனுக்கும் இதுபோன்ற ஒரு நிலை ஏற்பட்டது. மண்ணைக் கவ்வுகிற ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறார். அப்போது அவர் தேவனுடைய வசனத்தின்படி தான் உயிர்ப்பிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார். தேவனுடைய வார்த்தை

மட்டுமே விழுந்து கிடக்கின்ற நம்மை உயிர்ப்பிக்கும் வல்லமைப் பெற்றிருக்கிறது. சங்கீதம் 119–ல் தேவனுடைய வார்த்தை மிக நேர்த்தியான முறையில் விவரிக்கப் பட்டிருக்கிறது. வேதாகமத்திலேயே மிக நீளமான அதிகாரத்தைக் கொண்டது இந்த 119 ஆம் சங்கீதம் தான். இந்த அதிகாரத்தில் தேவனுடைய வார்த்தை கட்டளை, பிரமாணம், வேதம், சாட்சி போன்ற பல்வேறுபட்ட வார்த்தைகளால் விவரிக்கப்பட்டிருக்கிறது. பிரியமான வாலிப உள்ளங்களே! நமக்குப் பெலன் தேவைப்படும்போது நாம் தேவனுடைய வார்த்தைக்குத் திரும்புகிறோமோ? நாம் பெலனற்றுப்போகும்போது தேவனுடைய வார்த்தை மட்டுமே நம்மை எடுத்து நிறுத்தும் (119:28). "பெரும்பாலான வேளைகளில் நாம் பெலனற்றுப் போகும் போது நம் உறவினர்களிடம், நண்பர்களிடம் திரும்புகிறோம். அவர்கள் இருக்கின்ற கொஞ்ச பெலனும் அற்றுப்போகிற அளவுக்குச் செய்து விடுகிறார்கள் ". இதே அதிகாரத்தில் 92 ஆம் வசனத்தில் சங்கீதக்காரன் " வேதம் என் மனமகிழ்ச்சி யாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்து போயிருப்பேன் " என்று சொல்கிறார். இவ்வுலகத்தின் தத்துவ ஞானங்கள், பொன்மொழிகள் போன்றவைகள் எவ்விதத்திலும் நமக்கு ஆறுதலைத் தரவே முடியாது. நாம் எந்த கேள்விக்கு விடை தேடுகிறோமோ அதற்கான விடை தேவனுடைய வார்த்தையில் தான் உள்ளது. உலகில் வேறெங்குமில்லை. எனவே தான், வாலிபர்களாகிய நீங்கள் வாழ்க்கையே வெறுத்துவிட்டது, கசந்து விட்டது என்கிற நிலைக்குத் தள்ளப்படும்போது, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தைகளை உட்கொண்டு பெலனை பெற்றுக்கொள்ள வேண்டும்.

## II. சஞ்சலத்தால் நாம கரைந்து விட்டோம் என்ற நிலையில் (சங். 119:28)

சஞ்சலம் என்கிற வார்த்தையை நாம் கேட்கும்போதே நம் இருதயம் சஞ்சலப்படுகிறது. அவ்வார்த்தையை நாம் காதுகொடுத்து கேட்கவே விரும்புவதில்லை. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது அழையா விருந்தாளியாக வந்து நம்மை அலக்கழிக்கிறது. அப்படிப்பட்ட கசப்பான வேளைகளில் தேவனுடைய வார்த்தையை நாம் உட்கொள்ளும் போது நம் வாழ்க்கையை அது இனிமையாக்குகிறது. சங்கீதக்காரன் சங். 119:103ல் " உம்முடைய வார்த்தைகள் என் காதுக்கு இனிமையானவைகள் என்று சொல்லவில்லை. மாறாக, உம் வார்த்தைகள் என் நாவுக்கும், வாய்க்கும் இனிமை யானவைகள் என்று சொல்கிறார். அப்படியென்றால், வார்த்தைகளை நாம் ருசிக்க முடியுமா? அவைகளை நாம் உட்கொள்ள முடியுமா? நம் சரீரத்தால் வார்த்தைகளை உட்கொள்ள முடியும். வேறு விதமாகச் சொன்னால், நம் புறம்பான மனுஷனால் வார்த்தையை உட்கொள்ள முடியாது, நம் உள்ளார்ந்த மனுஷனால் முடியும். தேவனுடைய வார்த்தை ஆவியாயும், ஜீவனாயும் இருக்கிறது. நாம் ஆவிக்குரிய பிரகாரமாக பசியுள்ளவர்களாயிருந்தால் தேவனுடைய வார்த்தைகளை உட்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையை ருசித்து, அதன் இனிமையை ரசித்தவர்கள்

வாழ்க்கையில் ஏற்படுகிற கசப்பை ஒரு பொருட்டாகவே எண்ணமாட்டார்கள். இன்று அநேக வாலிபர்கள் சஞ்சலம் ஏற்படும் போது நண்பர்களின் ஆலோசனைகளை, உறவினர்களின் அறிவுரைகளை நாடுகிறார்கள். இன்னும் சிலர் உலகத்தின் தத்துவ ஞானங்களுக்கும், பொன்மொழிகளுக்கும் செவிகொடுக்கிறார்கள். ஆனால், அவைகளால் தங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டிருக் கிறார்களா? இல்லை. ஒரு பிரச்சனைக்காகப் போய் ஒன்பது பிரச்சனைகளை வாரிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தேவனுடைய சாட்சிகள் [வசனங்கள்] நமக்கு இன்பமும், ஆலோசனைக்காரருமாயிருக்கிறது என்று [சங் 119:24]ல் நாம் வாசிக்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை நாம் தியானித்து வாசிக்கும் போது, தேவன் நம்மோடு தம்முடைய வார்த்தைகளினால் பேசுகிறார் என்று உணர்கிறோம். பிரியமான வாலிபர்களே, தேவன் யாரிடமும் நேரடியாகப் பேசுவதில்லை என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

எனவே, சஞ்சலம் வந்து நம்மைத் தாக்கும் போது, நாம் துன்பத்தில் துவண்டு போகாதபடி, தேனிலும் இனிய தேவனுடைய வார்த்தையைத் தேடி உட்கொண்டால், அதை ருசித்தால், அதை அசைபோட்டால் கசப்பான அனுபவங்கள் நம்மை விட்டு அகன்று போய் இனிய தருணங்கள் நம்மைப் பின் தொடரும். பிரியமான வாலிபச் செல்வங்களே! உங்கள் வாழ்க்கையை வளமாக்க தேவனுடைய வார்த்தை என்னும் பொக்கிஷத்தை உங்கள் இருதயங்களில் சேர்த்து வைத்தால், வைத்து வைத்தால் இவ்வுலகில் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு நம்மைக் காப்பது மட்டுமின்றி, அது பரலோகத்தில் நமக்கு ஓர் இடத்தையும் நிச்சயப்படுத்தும் என்பதை நாம் அறியும் போது நம் உள்ளம் பரவசமடைகிறது. தேவனுடைய வார்த்தை நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் போதுமானது, நமக்கு பெலனைத் தருகிறது. அந்த வார்த்தைகளை தியானித்துப் படிப்பதை நாம் பழக்கமாக்கிக் கொண்டால், பரவசமடைந்து அவைகளை பற்றிக் கொள்வோம். தேவன் தாமே உங்களை அபரிதமாக ஆசீர்வதிப்பாராக! ஆமென். ✱

## பெற்றுக்கொள்

**விதையை விதைத்து அதனால் வரும்**
**அறுவடையைப் பெற்றுக்கொள்!**
**முயற்சி எடுத்து அதனால் வரும்**
**வெற்றியைப் பெற்றுக் கொள்!**
**தீமையை வெறுத்து அதனால் வரும்**
**நன்மையைப் பெற்றுக் கொள்!**
**சாத்தானை சத்தியத்தினால் வீழ்த்தி அதனால் வரும்**
**ஜெயத்தைப் பெற்றுக் கொள்!**

சிறுவர் பகுதி

# பேதுரு, யோவானிடமிருந்து

Dr. ABEL R. NAYAGAM

எனக்கு பிரியமான சிறு பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இந்த மாதமும் இந்த இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாதம் அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு சில பாடங்களைக் கற்றுக் கொள்வோம். தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனுஷனை பேதுருவும், யோவானும் சந்தித்தார்கள். அவன் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் சப்பாணியாய் இருந்தான் (அப் 14:22). அவன் தேவாலயத்தில் அலங்கார வாசலண்டையில் இருந்து தன்னுடைய பிழைப்பிற்கு பிச்சை கேட்டுக் கொண்டு இருந்தான்.

பேதுருவும், யோவானும் வருகிறதைப் பார்த்த சப்பாணி அவர்களிடமும் பிச்சை கேட்டான். ஆனால் அன்று அவனுக்கு அவனுடைய வாழ்க்கையை மாற்றுகிற ஒரு சம்பவம் நடந்தது. ஆம் குழந்தைகளே ! பேதுருவும், யோவானும் இயேசுவின் நாமத்தினாலே அவனுக்கு சுகம் கொடுத்தார்கள். அந்தத் தருணம் வரை சப்பாணியாய் இருந்த அவன் எழுந்து நடக்க ஆரம்பித்தான் (அப் 3:6). உடனே அவனுடைய கால்களும், எலும்புகளும் பெலன் கொண்டது. உடன் குதித்தெழுந்து நின்று நடந்தான். நடந்து, குதித்து தேவனைத் துதித்தான். இதற்குப் பிறகு, ஜனங்கள் சப்பாணிக்கு நடந்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்; பிரமித்தார்கள். பேதுரு அந்தத் தருணத்தில் ஜனங்கள் கூடி வந்திருக்கிறார்கள் என்று அறிந்து, உடனே அவர்களுக்கு இயேசுவைக் குறித்து சொல்ல ஆரம்பித்தான்.

**முதலாவது** அப் 3:12, 13ல் அற்புதத்தை தன் சுயசக்தியினால் செய்யவில்லை. மாறாக, இயேசுவின் நாமத்தினாலே இது நடந்தது என்று கூறினான். சில வேளைகளில் நாம் பேதுருவைப் போல், நமக்கு கிடைத்த நன்மைக்குக் காரணம் தேவன் என்று நினைக்காமல் என் முயற்சியால் ஆனது என்று நினைத்து தேவனுக்கு மகிமை சேர்க்க மறக்கிறோம். அப்படிப் பட்டவர்கள் பைத்தியக்காரர்கள் என்று ரோமர் 1:21,22 கூறுகிறது.

**இரண்டாவது**, அநேக ஜனங்கள் கூடி வந்த அந்த தருணத்தில் பேதுரு அவர்களுக்கு இயேசுவைக் குறித்து சொல்ல அதை ஒரு தருணமாக பயன்படுத்தினான்

பிள்ளைகளே ! இந்த மாதம் நாம் கற்றுக் கொள்ளப் போகிற பாடம் இது தான்.

முதலாவது, உங்கள் அறிவாலும், ஆற்றலாலும் கிடைத்த நன்மையை உங்கள் முயற்சியினால் மாத்திரம் கிடைத்தது என்று நினைக்காமல் அறிவையும், ஆற்றலையும் கொடுத்தது தேவன் என்று நினைத்து அவரை கனப்படுத்தி அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

இரண்டாவது, நமக்கு கிடைக்கிற தருணங்களில், முடிந்த வரை நம் நண்பர்களுக்கு தேவனைக் குறித்தும், அவருடைய அன்பைக் குறித்தும் சொல்லி அவர்களுக்கு தேவனை அறிமுகப்படுத்த வேண்டும்.

இது தான், பேதுருடமிருந்தும், யோவானிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்கள். இப்படி செய்வீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

*

## நாளும், நடப்பும்

- சென்னை அருகே திருவள்ளூரில் ரூ. 330 கோடியில் புதிய நீர் தேக்கம் - தமிழக அரசு
- இலங்கைக்கு போர்க்கப்பல் வழங்கும் முடிவைத் தள்ளி வைக்க வலியுறுத்துவேன் - மத்திய அமைச்சர் ஜி.கே.வாசன்
- அரசிதழில் வெளியிடப்பட்டது உணவு பாதுகாப்புச் சட்டம், நாடு முழுவதும் உடனடி அமல்
- இந்தியாவை ராகுல்காந்தி வழி நடத்தினால் அனைத்து தரப்பு மக்களும் மேம்படுவர் - மத்திய அமைச்சர் ஜோதி ராதித்யா சிந்தியா
- மேகாலய மாநிலம் பிரிக்கப்படாது - முதல்வர் முகுல் சஸ்மா.

# நிழலும், நிஜமும்

***(The Shadow and the Reality)***

**Bro. J.H. James Rajakumar**

(ஜூலை மாதத் தொடர்ச்சி)

**III C XII** கலாத்தியர் 4:21-31 இந்த வசன பகுதிகளை நான் ஏற்கனவே விளக்கியிருக்கிறேன். ஆனாலும், இப்பொழுது சுருக்கமாகச் சொல்லுகிறேன். நாம் வாக்குத்தத்தின் பிள்ளையான ஈசாக்கைப் போல புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களாய் இருக்க வேண்டும். இஸ்ரவேலைப் போல அடிமைத்தனத்தின் (நியாயபிரமாணத்தின்) பிள்ளைகளாக இருக்கக் கூடாது என்று பரிசுத்த ஆவியானவர் விளம்புகிறார்.

**C XIII** கலாத். 5:1-12 புதிய ஏற்பாட்டின்படி ஆவிக்குரிய வாழ்க்கையை தொடங்கின கலாத்திய நாட்டு கிறிஸ்தவர்கள் பழைய ஏற்பாட்டுச் சட்டங்களையும் கைக்கொள்ள வேண்டும் என்று உபதேசிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டதற்காக மீண்டும் கடிந்து கொள்கிறார். அதுமட்டுமல்ல, அதிலிருந்து அவர்கள் வெளியிலே வரவேண்டுமென்றும் இந்த போதனை தேவனால் உண்டானதல்ல என்றும் எச்சரிக்கிறார். முக்கியமாக, கலா. 5:3ல் புறஜாதிகளுக்கு நியாயப் பிரமாணத்தை கைக்கொள்வதினால் உண்டாகும் ஆபத்தை விவரிக்கிறார். அது என்னவென்றால், நியாயபிரமாண சட்டங்களிலே ஒன்றை நாம் இன்றைக்கு கைக்கொள்ளப் போனால் மற்ற அனைத்து சட்டங்களையும் கைக்கொள்ள வேண்டிய கடனாளியாக இருப்போம் என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்.

**C XIV** கலா. 6:12-16-ல் கிறிஸ்து இயேசுவுக்குள் நடந்து தேவனுடைய இஸ்ரவேலர்களாக கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டி, அவருடைய அச்சடையாளங்களைத் தரித்து நாம் வாழும்படி நம்மை பவுல் உற்சாகப்படுத்துகிறார்.

**D.** எபேசியர் நிருபம் நியாயப்பிரமாணம் எப்படி முடிக்கப்பட்டது என்ற விரத்தோடு மாம்சத்திற்குரிய இஸ்ரவேலர்கள் புறஜாதிகள் என்கிற பிரிவினையாகிய வித்தியாசத்தை நீக்கி சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற அனைவரையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக அவருடைய இரத்தத்தினாலே (புதிய உடன் படிக்கையினாலே) தேவனோடு நட்புரவாக்குகிறார் என்பதை மிகவும் தெளிவாகப் போதிக்கிறது. இன்றைக்கு பரலோகத்தின் ஆசீர்வாதங்கள், ஆவிக்குரிய நன்மைகள் கிறிஸ்துவின் மூலமாகவே வருகிறதாய் இருக்கிறது என்பதையும் நாம் கிறிஸ்துவுக்கு ஒப்பான வளர்ச்சியை அடையும்படி பொல்லாப்பை விட்டு அன்புடன் சத்தியத்தைக் கைக் கொண்டு அவருடைய சபையிலே பக்தி விருத்தியை அடைய வேண்டுமென்றும், குடும்ப வாழ்க்கையிலும் மற்ற எல்லா

சூழ்நிலையிலும் கிறிஸ்துவைப் பிரதிபலித்து நல்ல போர்ச்சேவகர்களாக ஜீவிக்க வேண்டு மென்றும் எபேசியர் புத்தகம் வலியுறுத்துகின்றது. (எபேசி. 2:1-22; 1:1-23; 4:1-32; 5:1-33; 6:1-24

**E.** அப்போஸ்தலராகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதின நிருபத்திலே நியாயப் பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டியதில்லை என்பதை வித்தியாசமான கோணத்திலே சொல்லியிருக்கிறார். 1,2 அதிகாரங் களிலே கிறிஸ்துவுக்காக தாம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு கிறிஸ்துவைப் போல தாழ்மையோடு மற்றவர் களுடைய தேவையை அறிந்து செயல்படுவதாகச் சொல்லியிருக்கிறார். மேலும், 3 ஆம் அதிகாரத்தில் தாம் நியாயபிரமாணத்தின் கீழே வாழும் போது கொண்டிருந்த மேன்மை யானவைகளையெல்லாம் (இலாபமாய் இருந்தவைகள் எவைகளோ) நஷ்டமாக விட்டுவிட்டு நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல் விசுவாசத்தின் மூலம் தேவனால் உண்டாயிருக்கிற நீதியை உடையவனாய் இருக்கவும், கிறிஸ்துவுடனும் அவருடைய பாடுகளுடனும் பவுல் எதற்காகப் பிடிக்கப்பட்டாரோ அதை பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்வதாக கூறுவதுடன் வேறு விதமாய் போதித்து நடக்கிறவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞன் என்றும் தைரியமாய் சொல்லுகிறார்.

**F.** நான் அதிகமாக விவரிக்க அவசியமில்லை என்று எண்ணுகிறேன். ஏனென்றால், ஏற்கனவே நாம் அநேக வசனங்களை விவரமாக ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். இப்பொழுது கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் 2:14-23 வரை உள்ள வசனங்களில் பவுலானவர் விவரிக்கிறது என்னவென்றால், நியாயப்பிரமாணம் நமக்கு எதிரிடையாய் இருந்த தென்றும், அதை இயேசுக் கிறிஸ்துவானவர் சிலுவையிலே ஆணியடித்து ஒழித்து விட்டார் என்பதையும் சொன்ன பின்பு, நியாயப் பிரமாணத்தின் காலத்திலே கடைபிடிக்கப்பட்ட பண்டிகைகள், பலிகள், நாட்களைக் கடைபிடிப்பது, சாப்பிடுவது சம்பந்தமான கட்டுப்பாடுகளை நீக்கிவிட்டார் என்பதையும் தெளிவு படுத்துகிறார்.

**G.** அப்போஸ்தலராகிய பவுல் தம்முடன் ஊழியம் செய்த திமோத்தேயுவுக்கு எழுதும்போது 1 தீமோ. 1:7-11-ல் தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும், அறியாதிருந்தும், நியாயப் பிரமாண போதகராக இருக்க விரும்புகிறார்கள் என்று இக்காலத்து நியாயப் பிரமாண போதகர்களைச் சாடிய பிறகு, நியாயப் பிரமாணத்தின் தன்மையை விவரிக்கிறார். 8ஆம் வசனத்தில் ஒருவன் நியாயப் பிரமாணத்தை நியாயப்படி அனுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம் என்கிறார். அதன் பொருள் என்னவெனில், நியாயப் பிரமாண சட்டங்கள் அனைத்தையும் விசுவாசத்தோடு கடைப்பிடித்தால் அது நீதியாயிருக்கும். (உபாகமம் 6:25). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் நியாயபிரமாணத்தின் கீழ் பிறந்து, வளர்ந்து மரணபரியந்தம் அதாவது, சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்து முழுமையான தேவனுடைய நீதியை அடைந்தார். ஆனால், நியாயபிரமாணத்தின் கீழே வாழ்ந்த எந்த ஒரு

மனிதனும் இயேசுவானவர் அடைந்த அளவிற்கு [பாதாளத்தை விட்டு எழுந்து வருகிற அளவிற்கு] நீதியை அடையவில்லை. ஏனென்றால், யாக் 2:10ன் படி ஒரு சட்டத்தை மீறினால் [ஒன்றிலே தவறினால்] எல்லாவற்றிலும் குற்றவாளி யாயிருப்பான் என்கிற சட்டமும் இருந்த படியினாலே, யாரும் பரிபூரணமான நீதியை அடைய முடியாமல் போனார்கள். நாம் நியாயபிரமாணத்தின் எல்லா சட்டத்தையும் கைக்கொள்ள முடியுமா என்று சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். இன்றைக்கு நாம் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்ள வேண்டுமானால் இஸ்ரவேலிலே ஒருவராக பிறந்திருக்க வேண்டும். எட்டாம் நாளிலே மாம்சத் திற்குரிய விருத்தசேதனம் அடைந்திருக்க வேண்டும். லேவி ஆசாரியனை கொண்டு எருசலேம் தேவாலயத்தின் பலி பீடத்திலே பலி செலுத்தி தொழுகை செய்திருக்க வேண்டும் போன்ற அதன் எல்லா சட்டங்களுக்கும் நாம் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். அப்படிச் செய்தால் நல்லதுதான். இங்கே கேள்வி என்ன வென்றால், நம்மால் எல்லா சட்டங்களையும் கடைபிடிக்க முடியுமா? என்பதுவே. ஏனென்றால், புறஜாதியாகிய நாம் ஒரு சட்டத்தைக் கடைப்பிடித்து மற்ற எல்லா சட்டங்களையும் கடைப்பிடிக்காவிட்டால் குற்றவாளி யாக தீர்மானிக்கப்படுவோம். அதன் பொருள் என்னவென்றால், பரலோகத் திற்கு போவதற்கு பதிலாக நரகத்தை நோக்கி போகும்படி நம்முடைய பாதையை நாமே வகுத்துக் கொள்ளுகிறோம் என்பது தான். மேலும், அப்போஸ்தலராகிய பவுல் விசுவாசமுள்ளவர்களுக்கு அல்ல அல்லது விசுவாசத்தை கொடுக்கும்படியும் அல்ல பலவிதமான ஆழமான பாவத்தில் வாழ்ந்த மக்களை ஒழுங்குபடுத்தி பரிசுத்தமான வாழ்க்கை வாழ நியாயப் பிரமாணம் கொடுக்கப்பட்டது என்ற நோக்கத்தையும் தெளிவுபடுத்துகிறார்.

**H.** எபிரெயர் நிருபம் அப்போஸ்தலராகிய பவுலுடைய பெயரில் எழுதப் பட்டதாக சொல்லப்படாவிட்டாலும் அநேகர் பவுலின் நிருபமாக இந்த நிருபத்தை அங்கீகரிக்கிறபடியால் அப்போஸ்தலராகிய பவுலுடைய நிருபங்களின் வரிசையில் இந்த நிருபத்தையும் சேர்த்துக் கொள்ளலாம்.

**I.** இந்த எபிரெயர் நிருபம் எழுதப்பட்டிராவிட்டால் அநேக காரியங்கள் இந்நாள் வரைக்கும் மறைபொருளாகவே இருந்திருக்கும். எபிரெயர் 1:1,2 வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவானவரை எவ்விதம் உயர்த்திப் பேசுகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த இரண்டு வசனங்களில் நாம் கவனிக்கும்போது இயேசு கிறிஸ்துவானவர் தேவனோடு கூட இணை சிருஷ்டிகராக இருந்தார் என்பது தெளிவாகிறது. மேலும், இயேசு கிறிஸ்துவானவர் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமிக்கப் பட்டிருக்கிறார். இந்த இரு தகுதிகள் எந்த ஒரு தீர்க்கதரிசிக்கும் [அல்லது] தீர்க்கதரிசிகளில் யாருக்கும் அளிக்கப்படவில்லை என்பது விவாதத்திற்கு இடமின்றி வேதாகமத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதசிரிகள் மூலமாய் பிதாக்களுக்கு திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில்

குமாரன் மூலமாய் திருவுளம் பற்றினார். இதைக் குறித்து நான் ஏற்கனவே விவரித்து எழுதியிருந்தாலும் மீண்டும் ஒரு உதாரணத்துடன் இதை கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. பூர்வ காலங்களில் என்பதற்கு இயேசு கிறிஸ்துவுக்கு முன்னான காலங்களை குறிப்பிடலாம். பங்கு பங்காகவும் என்பது வெவ்வேறு காலங்களைக் குறிப்பிடுவதாகும். வகை வகையாகவும் என்பது வெவ்வேறு முறைகளாக என்பதாகும். இப்படிப் பிதாக்களுக்கு தீர்க்கதரிசிகள் மூலமாய் தேவன் திருவுளம் பற்றினார். திருவுளம் பற்றினார் என்பது அவர்களோடு அவர் களுக்காக பேசினார் அல்லது செய்தியைக் கொடுத்தார் என்பதாகச் சொல்லலாம். இந்தக் காலங்களுக்கு பிறகு, தேவன் தம்முடைய சுந்தரவாளியாகிய இணை சிருஷ்டிகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் பேசினார் அல்லது திருவுளம் பற்றினார். இந்த வார்த்தைகளில் நாம் கவனிக்கும் போது திருவுளம் பற்றினார் என்று இறந்த காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு காலகட்டதிற்குள் அதாவது முதலாம் நூற்றாண்டிலே தாம் பேச வேண்டிய அல்லது திருவுளம் பற்ற வேண்டிய எல்லா சத்தியத்தையும் பேசி விட்டார் என்பது அர்த்தமாயிருக்கிறது. அவர் பேசின சத்தியத்தை அவருடைய அப்போஸ்தலர்கள், முதலாம் நூற்றாண்டு தீர்க்கதரிசிகள் பதிவு செய்து வைத்தார்கள். இந்தக் கூற்றின்படி கிறிஸ்துவானவர் இருபது நூற்றாண்டுக்கும் மேலாக தொடர்ந்து புதிய புதிய சத்தியங்களைப் பேசாமல் ஒரு கால கட்டத்தில் புதிய ஏற்பாட்டு சத்தியம் முழுவதையும் பேசி கொடுத்து விட்டார் என்று உறுதி செய்கிறோம் (யூதா 3).

இன்றைக்கு கிறிஸ்துவானவர் பேசுகிறார் என்றால் (எபி. 12:25) கொடுக்கப்பட்ட வேத வசனங்கள் மூலமாகவே பேசுகிறவராயிருக்கிறார். புதிய ஏற்பாட்டுக் காலத்தில் கிறிஸ்துவின் வார்த்தைகள் அல்லது சத்தியம் (உபதேசம்) மட்டுமே கைக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு நிகழ்ச்சியை சற்று விவரமாக கவனிப்போமாக. நாம் வேதாகமத்தை எடுத்துக் கொண்டு மத்தேயு 17-ஆம் அதிகாரம் 1-9 வசனங்கள் இதற்கு இணை வசனமாக லூக்கா 9:28-36 இந்த பகுதிகளை சற்று ஜெப சிந்தனையுடன் ஆழ்ந்து கவனிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த நிகழ்ச்சியில் ஆண்டவராகிய இயேசுவானவர் பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூவரை கூட்டிக் கொண்டு ஒரு மலையின் மேல் ஏறினார். அங்கே அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் சூரியனைப் போல பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தை போல வெண்மையாயிற்று (சங். 104:2; வெளி. 1:16). அப்பொழுது மோசேயும், எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக மகிமையோடே காணப்பட்டார்கள். அவர்கள் பேசின காரியம் என்னவென்றால், இயேசுவானவர் எருசலேமிலே நிறைவேற்றப் போகிற அவருடைய மரணத்தைக் குறித்து பேசினார்கள் என்று லூக்கா பதிவு செய்கிறார். அதன் பிறகு, பேதுரு இயேசுவை நோக்கி ஆண்டவரே நாம் இங்கே இருக்கிறது நல்லது உமக்கு ஒரு கூடாரமும் மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்று, தான் சொல்லுகிறது இன்னதென்று அறியாமல் சொன்னான். இந்த

அறியாமையின் வார்த்தையைக் குறித்து மத்தேயு எழுதவில்லை. ஏனென்றால், அவர் யூதர்களுக்கு எழுதினதால் அது அவசியமாகத் தெரியவில்லை. ஆனால், லூக்கா இது இன்னதென்று அறியாமல் சொன்ன வார்த்தை என்று பதிவு செய்கிறார். பழைய ஏற்பாட்டு காலத்து மக்கள் மோசேயை யெகோவா தேவனுக்கு அடுத்த ஸ்தானத்தில் எண்ணினார்கள். ஏனென்றால், தேவன் இஸ்ரவேல் மக்களை மோசேயைக் கொண்டு எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். பத்துக் கற்பனைகளும் அதைச் சார்ந்த சட்டங்களான நியாயப்பிரமாண சட்டங்களையும் மோசேயைக் கொண்டு கொடுத்தார். அதுமாத்திரமல்ல ஐந்து பெரிய ஆகம புஸ்தகங்களை தேவன் மோசேயைக் கொண்டு எழுதியிருந்தார். மோசே நியாயப்பிரமாண சட்டங்களை தேவனிடத்திலிருந்து வாங்கிக் கொண்டு வரும் போது அவருடைய முகம் மகிமை பிரகாசம் இருந்ததாகவும் அவருடைய முகத்தை இஸ்ரவேல் மக்கள் பார்க்கக்கூடாத அளவிற்கு அந்த பிரகாசம் இருந்ததாகவும் வேதத்திலே சொல்லப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்கள் அனைவருக்கும் மன்னாவையும், தண்ணீரையும் அற்புதமாகப் பெற்று தந்தவர் என்பதாலும் அவரிடம் இருந்த குணங்களுக்காகவும் இஸ்ரவேல் மக்கள் நீண்டகாலமாக மோசேயை மிகவும் உயர்ந்த ஸ்தானத்திலே கருதினார்கள். கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும் கூட யூதர்கள் தங்களை மோசேயின் சீஷர்கள் என்று சொல்லிக் கொள்வதை உயர்வாக எண்ணினார்கள் (யோவான் 9:28,29).

ஆனால், இவர்கள் அனைவரும் மோசேயினுடைய கூற்றைக் கவனிக்க சற்று தவறியிருந்தார்கள் என்று கூடச் சொல்லலாம் (உபாகமம் 18:17-19). மோசே இந்த வசனங்களில் சொல்லியிருந்த தீர்க்கதரிசி நசரேய னாகிய இயேசுவே என்பதை ஒரு சில யூதர்கள் மாத்திரமே பிற்காலங்களில் கண்டுபிடித்தார்கள். அடுத்தது, எலியாவைப் பற்றி பார்ப்போம். இஸ்ரவேலர்களுக்கு அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளில் எலியா சற்று வித்தியாசமானவராக அல்லது மிகைப்படுத்தப் பட்டவராக இருந்தாரென்பது நம்மெல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். மிகவும் கடினமான வட ராஜ்ஜியத்தின் ராஜாவாகிய ஆகாபுக்கும் அவனுடைய மனைவி யாகிய யேசபேலுக்கும் விரோதமாக தீர்க்கதரிசனம் சொன்னார். மேலும், அவர் மரணத்தை காணாதபடிக்கு அக்கினி ரதம், அக்கினி குதிரைகள் மூலமாக சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனார் என்கிற நிகழ்ச்சி வேறே தீர்க்கதரிசி களுக்கு சொல்லப்படவில்லை. மேலும், இயேசுவானவருக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி வந்து ஊழியம் செய்த யோவான் ஸ்நானகன் கூட எலியாவின் ஆவியை உடையவராய் இருப்பார் என்று சொல்லப்பட்டது.

ஆகையினால், இஸ்ரவேலர்களாலே மிகவும் உயர்வாக எண்ணப்பட்ட இந்த இரு தீர்க்கதரிசிகளையும் விட கிறிஸ்துவின் சீஷர்கள் கிறிஸ்து ஒருவரை மாத்திரமே உயர்வாக எண்ண வேண்டுமென்றும், இவரே தேவனுடைய நேச குமாரனாயிருக்கிறார் என்றும் இனிமேல் இவருக்கு மாத்திரமே (கிறிஸ்துவின் காலத்தில் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு மாத்திரமே) செவி கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். மோசேயையும், எலியாவையும் இயேசு

கிறிஸ்துவுக்குச் சமமாக ஒப்பிடக் கூடாது என்பதையும் வலியுறுத்தும் படி தேவன் மேகத்திலிருந்து வந்த சத்தத்தின் மூலம் சீஷர்களுக்கு அவர்கள் பயப்படும் அளவிற்கு உணர்த்தினார். லூக்கா 9:36 – ல் அந்த சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார் என்று பரிசுத்த ஆவியானவர் பதிவு செய்கிறார். இதைக் குறித்த பேதுருவும் தன்னுடைய இரண்டாம் நிருபத்தில் நினைவுபடுத்தி எழுதுகிறார். [2 பேதுரு 1:15 – 8] ஆகவே, எபிரெயர் 1:1 – 2 வசனங்கள் இன்றைக்கு நாம் கிறிஸ்துவானவர் திருவுளம் பற்றின, அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி ஸ்தாபித்த புதிய உடன்படிக்கையின் மூலமாகவே தேவனை நாட வேண்டும். புதிய ஏற்பாடாகிய கிறிஸ்துவின் உபேசத்தின்படியே இன்றைக்கு விசுவாசித்து வாழும்படியே இந்த வசனங்களும், நிகழ்வுகளும் நம்மை வலியுறுத்துகின்றன. தொடர்ந்து வருகிற மாதங்களில் ஆராயுவோமாக. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்!

*

## ஸ்தேவானின் மரணத்தில் நாம் காண்பவைகள்

* **பயமுறுத்தும் கூட்டத்தின் நடுவே வைராக்கியமான முகம்**
* **கர்த்தர்மேல் எத்தனை அன்பு, எத்தனை விசுவாசம்**
* **எந்நிலையிலும் உண்மையைப் பேசக்கூடிய தைரியம்**
* **கர்த்தருக்குள் மரிப்பதில் எத்தனை சந்தோஷம், எத்தனை சமாதானம்**

## நாம் மறந்து விட்டோமா?

**ஆபிரகாம்லிங்கன் அமெரிக்கர்களைப் பற்றிச் சொன்னது.**

"நாம் வானத்தின் மிகச் சிறந்த அபரிமிதமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு வருகிறோம். நாம் எந்த ஒரு தேசமும் ஒருபோதும் வளர்ந்திராத அளவுக்கு எண்ணிக்கையிலும், செல்வத்திலும், வல்லமையிலும் வளர்ந்திருக்கிறோம்.

ஆனால், நாம் தேவனை மறந்துவிட்டோம். நாம் நம்மை சமாதானத்தோடு பாதுகாத்து, நம்மைப் பெருகச் செய்து, வளமாக்கிப் பலப்படுத்திய கிருபையுள்ள கரத்தை மறந்துவிட்டோம். இந்த ஆசீர்வாதங்களெல்லாம் நம்முடைய மேலான அறிவினால் உண்டானதென்று வஞ்சனையுள்ள இருதயங்களில் வீணாகக் கற்பனை செய்துவிட்டோம். வெற்றிப் போதையில் தள்ளாடி, மீட்கும் மற்றும் பாதுகாக்கும் கிருபையின் அவசியத்தை உணராமல், நம்மை உண்டாக்கின தேவனை நோக்கி ஜெபிக்கப் பெருமையுள்ளவர்களாகிவிட்டோம் "

# வசன ரீதியான கிறிஸ்துவின் சபை

## (பாடம்-34) இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர்

Bro. K. பாஸ்கர்

**வெ**ளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் சொல்லப்பட்டுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்பதைக் குறித்து அநேக கிறிஸ்தவர்கள் தவறான எண்ணங்கொண்டுள்ளனர். எப்படியெனில், தேவன் பரலோகத்திற்கு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை செலக்ட் பண்ணிவிட்டார் என்றும், அவர்கள் யூதர்கள் என்றும் சொல்லி வருகின்றனர். மீதியான நாம் அனைவரும் இந்த பூமியில் மனநிறைவுடன் இருப்போம் என்றும் சொல்லி வருகின்றனர். இது உண்மையா? வேதவசனம் என்ன சொல்கிறது என்பதை நாம் அறிந்து வசன ரீதியான கிறிஸ்துவின் சபையை ஏற்றுக் கொண்டு கிறிஸ்தவர்களாக வாழ்வோமாக.

### I. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்பது என்ன?

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மட்டும் இது குறித்து சொல்லப்பட்டுள்ளது என்பதை கவனிக்கவும். முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்றும் [வெளி 7:4] அவர்கள் சிங்காசனத்திற்கு முன்பாகவும், நான்கு ஜீவன்களுக்கு முன்பாகவும், மூப்பர்களுக்கு முன்பாகவும் புதுப்பாட்டை பாடினார்கள். அந்தப் பாட்டு பூமியிலிருந்து மீட்டுக் கொள்ளப்பட்ட இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரேயல்லாமல் வேறு ஒருவரும் கற்றுக் கொள்ளக் கூடாதிருந்தது என்றும் உள்ளது. [வெளி 14:3] இந்த இரண்டு வசனப் பகுதிகளில் மட்டும் சொல்லப்பட்டுள்ளது. இந்த எண்ணின் அடையாளம் என்ன என்பதைக் குறித்து அறிந்து கொள்வோமாக.

இந்த விசேஷித்த எண்ணின் அடையாளம் தேவனுடைய மக்களின் அடையாளமாக சொல்லப்பட்டுள்ளது. வெளி 7:4ல் முத்திரைப் போடப்பட்டவர் களைக் குறித்து சொல்லப்பட்டுள்ளது. முத்திரை என்பது பாதுகாப்பைக் குறிக்கிறது. உதாரணமாக, யோசேப்பு எகிப்திலே பார்வோன் ராஜாவால் உயர்த்தப்படும் போது யோசேப்பின் பாதுகாப்புக்காக பார்வோன் ராஜா தன் கையில் போட்டிருந்த தன் முத்திரை மோதிரத்தைக் கழற்றி அதை யோசேப்பின் கையிலே போட்டான் [ஆதி 1:41, 42].

வெளி 7:1–4ல் பூமியின் நான்கு திசைகளிலிருந்து அழிவின் காற்று அடிக்கத் தொடங்குகிற போது தேவனுடைய மக்கள் பாதுகாக்கப்படுகின்றனர் என்பதைச் சொல்லுகின்றது. அப்படிப் பாதுகாக்கப்படுகின்ற தேவனுடைய மக்களின் தொகை தான் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் ஆகும். தேவன் நம்மைக் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும் பொழுது அதாவது, ஞானஸ்நானம் பெறும் பொழுது பாதுகாக்கப்படுகிறோம். அதாவது, இரட்சிப்பைப்

பெறுகின்றோம். அப்படி இரட்சிக்கப்படுகின்ற ஒவ்வொருவரையும் தேவன் பரிசுத்த ஆவியால் முத்திரைப் போடப்படு கின்றோம் என்று தேவனுடைய வசனம் கூறுகின்றது (எபே 1:13,14) நாமும் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரில் பங்கு பெற்றவர்களாய் காணப்படு கின்றோம்.

இந்த எண்ணிக்கை ஒரு முழுமையின் அடையாளமாகச் சொல்லப்படு கிறது. எப்படியென்றால், வேதாகமத்தில் பன்னிரெண்டு என்ற எண் ஒரு முழுமையின் எண்ணாகச் சொல்லப்படுகிறது. வெளி 7:5—8 ல் பன்னிரெண்டு முறை பன்னிரெண்டு என்ற எண்கள் சொல்லப்படுகிறது. இதன் பொருள், முழுமைத்துவத்தின் முழுமையாக இருக்கிறது என்று பொருளாகின்றது. இந்த எண்களைக் கூட்டிப் பார்த்தால் நூற்று நாற்பத்து நான்கு வருகின்றது. ஆயிரம் என்பது முழுமையின் அடையாளமாக உள்ளது. எனவே, இந்த எண்களை பெருக்கிக் கணக்கிடும்போது இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் வருகிறது. ஆகவே, இது முழுமைத்துவத்தின் முழுமையின் அடையாளமாக உள்ளது. இரட்சிக்கப்படுகின்ற கூட்டம் முழுமையின் கூட்டமாக ஒரு பெரிய கூட்டமாக ஒரு பலமுள்ள கூட்டமாகச் சொல்லப்படுகிறது.

வெளி 14:1ல் சொல்லப்பட்டுள்ள இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் அதே தேவனுடைய மக்களைத் தான் சொல்லுகிறது. அவர்கள் சாத்தானின் கூட்டணியான அறுநூற்று அறுபத்தாறு என்பவர்களை வெற்றி கண்டு வெற்றியின் பாட்டை புதுப்பாட்டை பாடுகின்றனர். இதன் மூலம் தேவனுடைய மக்கள் ஆறுதல் பெறுகின்றனர் பரலோகத்தில் (வெளி 14:1—5)

## II. இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்பது இஸ்ரவேலரா?

முத்திரை போடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக் கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரை போடப் பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்று வசனத்திலுள்ளதை அநேகர் அதை நேரடியான அர்த்தம் கொள்கின்றனர். அதாவது, முத்திரை போடப்பட்டவர்கள் இஸ்ரவேலர் மட்டும் தான். அவர்களை தேவன் பரலோகத்திற்கு செலக்ட் பண்ணி விட்டார் என்று போதிக்கின்றனர்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார் பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனே அல்லாமல் பரலோகத்திற்கு ஏறினவன் ஒருவனுமில்லை என்றார். (யோவான் 3:13) அப்போஸ்தலனாகிய பவுல் கூறும் போது, அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து பின்பு அவர் வருகையில அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்று கூறுகின்றார் (கொரி 15:23). ஆகவே, தேவன் யாரையும் செலக்ட் பண்ணவில்லை. செலக்ட் பண்ணி விட்டதாக எந்த வசனமும் கூறவில்லை (எபி 11:40). பழைய ஏற்பாட்டு தேவனுடைய பிள்ளைகள் நம்மையல்லாமல் பரலோகத்திற்கு போக இயலாது.

மேலும், பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள இஸ்ரவேல், யூதா ஆகிய ராஜ்யங்கள் அழிந்து போயின. மீதியான யூதர்கள் பாபிலோன் தேசத்தில் சிறையில் இருந்தனர். எழுபது ஆண்டுகள் கழித்து பாபிலோன் சிறையிலிருந்து புதிய

தலைமுறையினர் பாலஸ்தீனாவுக்கு வந்தனர். அப்பொழுது இஸ்ரவேல், யூதா ராஜ்யங்கள் இல்லை. அவர்கள் அனைவரும் யூதர்கள் என்றே அழைக்கப்பட்டனர் [யோ 4:9,22] இந்த யூதர்கள் தங்களுக்கு வந்திருந்த இரட்சிப்பைப் புறக்கணித் தனர். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியவில்லை. ஆகவே, இரட்சிப்பு புறஜாதி மக்களுக்குக் கிடைத்தது [அப் 13:45,46]. ஆகவே சபையில் அதிகமாக இருந்தவர்கள் புறஜாதி மக்களே ! கொஞ்ச யூதர்கள் மட்டுமே இரட்சிக்கப்பட்டு சபையில் இருந்தார்கள். முதல் நூற்றாண்டில் பெருந்துன்பத்திற்கு ஆளானவர்கள் பெரும்பாலும் புறஜாதி கிறிஸ்தவர்கள். கொஞ்ச யூத கிறிஸ்தவர்களும் துன்பப்பட்டனர். அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எழுதப்பட்டது. அவர்கள் அனைவரும் தேவனுடைய மக்களாக இருந்தனர். இதை அடையாளப்படுத்தவே இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்றும் இஸ்ரவேல் கோத்திரத்தார் என்றும் சொல்லப்படுகிறது. ஆகவே, இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்பது பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்ட இஸ்ரவேலர் களையோ, யூதர்களையோ குறிக்கவில்லை. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு ஆட்டுக்குட்டி யானவரின் இரத்தத்தினால் மீட்டுக் கொள்ளப்பட்டு ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் [வெளி 14:1-3] அவர்கள் கிறிஸ்தவர்கள்.

கிறிஸ்தவர்கள் அனைவரும் ஆவிக்குரிய இஸ்ரவேலராயிருக்கிறார்கள் என்று வேதவ்சனம் கூறுகின்றது. ஆதலால், புறம்பாக யூதனானவன் யூதனல்ல. புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன். எழுத்தின்படி உண்டாகாமல் ஆவியின் படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விடுத்த சேதனம் என்று வேதவசனம் கூறுகின்றது [ரோமர் 2:28]. யூதர்கள் ஆபிரகாமின் சந்ததியாய் இருப்பதினால் மட்டும் அவர்கள் விசேஷித்த மக்களாக இருப்பதில்லை. ஆபிரகாம் விசுவாசிக்கிற யாருக்கும் தகப்பனாக இருக்கின்றார். அது யூதனாக இருந்தாலும், புறஜாதி யினராக இருந்தாலும் கிறிஸ்துவை ஞானஸ்நானத்தின் மூலமாக அவரை ஏற்றுக் கொள்கிற யாவரும் ஆபிரகாமின் சந்ததியாக இருக்கிறார்கள் [கலாத் 3:26-29].

வெளி 7:5-8 ல் சொல்லப்பட்டுள்ள கோத்திரப் பிதாக்கள் ஒவ்வொரு கிறிஸ்தவரைக் குறிக்கும் அடையாளச் சொல் ஆகும். ஆகவே தான், கோத்திரப் பிதாக்களின் பட்டியல் வரிசையாக சொல்லப்படவில்லை என்பதை கவனிக்கவும். ஆகவே, இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் என்பது மாம்சத்தின்படி இஸ்ர வேலரைக் குறிக்கவில்லை. ஆவிக்குரிய இஸ்ரவேலரான கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது.

## II. மீதியாக உள்ள பரிசுத்தவான்கள் மனநிறைவுடன் பூமியில் வாழ்வார்களா?

தேவன் பரலோகத்திற்கு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேரை ஏற்கனவே செலக்ட் பண்ணி விட்டார். ஆகவே மீதியாக உள்ள பரிசுத்தவான்கள் மனநிறைவுடன் பூமியில் வாழ்வார்கள். அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும். புலி, வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக் கொள்ளும். கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும் ஒருமித்திருக்கும். ஒரு சிறு பையன் அவைகளை

நடத்துவான். பசுவும், கரடியும் கூடி மேயும். அவைகளின் குட்டிகள் ஒருமித்து படுத்துக் கொள்ளும். சிங்கம் மாட்டைப் போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வலையின் மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்டு விரியின் புற்றிலே தன் கையை வைக்கும் (ஏசா 11:6–8) என்று போதிக்கிறார்கள்.


ஏசாயா தீர்க்கதரிசி இயேசு கிறிஸ்து பிறக்குமுன் சுமார் ஏழுநூறு ஆண்டுகளுக்கு முன்னால் இயேசு கிறிஸ்து பற்றியும், அவரது ஆளுகை பற்றியும் தீர்க்கதரிசனம் உரைத்தார். ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி அவர் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும் என்றார் (ஏசா 11:1). இதன்படி இயேசு கிறிஸ்து ஈசாயின் குமாரன் தாவீதுவின் வம்சத்தில் பிறந்தார். கிளையாகிய அவருடைய சபையை ஸ்தாபித்தார் (மத் 16:18). இப்பொழுது அவருடைய சபை உலகமெங்கும் பரவி செழித்துக் கொண்டிருக்கிறது. கிறிஸ்துவின் சபை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த சபையில் உள்ளவர்கள் தங்களின் மிருக குணங்களிலிருந்து மனந்திரும்பி ஒற்றுமையுடன் இருப்பதைத்தான் ஏசாயா தீர்க்கதரிசி தீர்க்கதரிசனமாக உரைத்தார். அதன்படி, இப்பொழுது கிறிஸ்துவின் சபையார் தங்கள் மிருக குணத்தை விட்டுவிட்டு மனந்திரும்பி யவர்களாக இருக்கின்றனர். மற்றபடி இந்தத் தீர்க்க தரிசனம் எதிர்காலத்தில் அதாவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் காலத்தைக் குறித்து பேசவில்லை. ஏசாயா தீர்க்கதரிசனம் மாத்திரமல்ல. தானியேல், எரேமியா, தாவீது போன்ற பழைய ஏற்பாடு தீர்க்க தரிசனங்கள் எல்லாம் கிறிஸ்து பிறந்து அவர் சிலுவையிலே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளிலே உயிர்த்த போது எல்லாம் நிறைவேறி விட்டதாக இயேசு கிறிஸ்து கூறினார் (லூக் 24:44). நமக்கு அதாவது கிறிஸ்தவர்களுக்குத் தீர்க்க தரிசன புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் மட்டுமே என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் மீதியுள்ள பரிசுத்தவான் களைக் குறித்தோ அவர்கள் மனநிறைவுடன் பூமியில் வாழ்வதைக் குறித்தோ சொல்லவில்லை. அப்போஸ்தலர்கள் எல்லாரும் இயேசு கிறிஸ்து வரும் பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம். பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் என்று கிறிஸ்தவர்களுக்கு போதிக்கின்றனர் (2 பேதுரு 3:10) கிறிஸ்தவர்கள் அனைவரும் அவருடைய வருகையில் அவரோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் என்றும் போதித்தனர் (1 தெச 4:17). மனநிறைவுடன் பூமியிலே இருப்போம் என்று போதிக்கவில்லை. ஆகவே இப்படிப்பட்ட மனித போதனையை உதறித் தள்ளிவிட்டு கிறிஸ்துவின் போதனையை ஏற்றிக் கொண்டு வசன ரீதியான கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புவோமாக!

*

**(தொடரும்)**

World Evangelism
Gospel Media



## Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV

Every Monday 7:00-7:15 am and
Every Thursday 9:30-10:00 am
Every Saturday 7:15-7:30 am

Contact : 98427 30382

## Arjunan in Tamil on Tamilan TV & Radio:

TV:Every Monday 6.00-6.15 a.m and Every Saturday 6.15-6.30 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile: 9443558041)

## Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV:


TV:Every Sunday 6.00 p.m and Saturday 8.00 a.m.
Every Wednesday 6.30 p.m and Thursday 2.30 a.m **on Rakshana TV:** (ANDRAPRADESH Contact Phone: 08842363722)

## P.R.Swamy & Douglas in Tamil on Radio:

Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNADAKA Contact Mobile: 09844 70763)

## P.K.Varghese in Malayalam on Hindi TV:

TV:Every Saturday 6.00-6.30 a.m on Jai Hindi Channel. (KERALA Contact Mobile: 9447035465)



## Philemon & Kingsley in Tamil on Tamilan TV:

TV:Every Tuesday 9.30-9.45 p.m and Every Sunday 6.45-7.00 a.m. (TAMILNADU Contact Mobile: 9244214421)

## Sunny, Francis & Vinay David in Hindi on Hindi TV:


TV:Every Tuesday 7.00-7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile: 09810896789)


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்.





Regd. News Paper RNI No. 47661/87
Postal regn. No. Erode/26/2012-2014
Posted at Erode HPO on 20/21 of Every Month.
Licensed to Post without pre payment
No: TN / WR / ERD / 03 / WPP / 2012-2014


# எங்களது இதர வெளியீடுகள்











சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
- ஆசிரியர்

பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்

## திருமறை தியானம்

### தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | திங்கள் | காலை | 7:00 | மணி |
| தமிழன் TV | வியாழன் | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

**விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.**

இயக்குனர்
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ.எண் 27, காங்கேயம் 638-701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.